# இந்நாள்வரை காத்து வந்த தேவன்...

ஒரு தகப்பனானவர், நாடுவிட்டு நாடு சென்று, பல கஷ்டங்கள் துன்பங்கள் மத்தியிலும் தன்னுடைய மகனானவனை அவனுடைய பிறந்த நாள் முதல், பல சவால்கள் மத்தியில், அநேக தியாகங்களை செய்து, தோளில் சுமந்து, பாதுகாத்து, வளர்த்து வந்தார். அவன் வளர்ந்து வாலிப பிராயத்தை அடைந்த போது, தகப்பனானவர் தன்மேல் பாராட்டிய அன்பையும், தன்னை வழிநடத்தி வந்த வழியையம் முழுமையாக உணராதவனாக இருந்தான். பல காரியங்களைபுரிந்து கொள்வது அவன் வயதிற்கும் அனுபவத்திற்கும் அப்பாற்பட்ட காரியமாக இருந்தது. அவன் விபரமறியாத குழந்தையாக இருந்த போது நடந்த சம்பவங்கள் யாவையும் அவன் எப்படி அறிந்து கொள்ள முடியும்? சில வேளைகளிலே, தகப்பனா னவரின் ஒரு சில தியாகங்களை பற்றி அவன் தன் தாயார் சொல்ல கேள்விப்பட்டிருக்கலாம். அதைத் தவிர தான் அறிவுக்கு வந்த நாளிலே தகப்பனானவர், தன்னை கண்டித்து தண்டித்த நாட்களே அதிகமாக ஞாபகத்தில் இருந்தது. வாலிபத்தின் நாட்களிலே, தான் எல்லாவற்றையும் அறிந்தவன், எனக்கென்று ஒரு வாழ்க்கை இருக்கின்றது. என்னு டைய தனிப்பட்ட காரியங்களுக்குள் யாரும் நுழைந்து விடகூடாது என்று எண்ணம் அவன் மனதில் உருவாக ஆரம்பித்தது. அவன் தன் தகப்பனானவரை வெளிப்படையாக எதிர்த்து நிற்காவிடினும், அவரை தன் வாழ்வின் முக்கிய காரியங்கள் என்று அவன் கருதியவற்றில், அவரை தன் வாழ்வில் நுழைய அனுமதிக்காதவனாக இருந்தான். பிரியமான சகோதர சகோதரிகளே, இந்த உலகத்தின் பெற்றோர்கள், தங்கள் பெலவீனத்திலும் தங்கள் பிள்ளைகளை தூக்கி சுமக்கின்றார்கள். அப்படியானால், சர்வ வல்லமையுள்ள, என்றும் மாறாத, பிதாவாகி தேவன் தாமே எவ்வளவாய் நம்மை தூக்கி சுமந்து வருகின்றார் என்பதை இன்று தியானித்து பாருங்கள். ஒரு தகப்பன் தன் பிள்ளையை சுமப்பது போல, இது வரைக்கும் நம்மை சுமந்து வந்தார். அந்த வாலிபனை போல, நாம் தேவனை நம் வாழ்வில் அனுமதிகாகத நாட்களும், முரட்டாட்டம் பண்ணும் நாட்களும் நமக்குண்டாயிருந்திருக்கலாம். அந்த நாட்களிலும் கூட அவர் நீடிய பொறுமையயுள்ளவராய் நம்முடைய மீறுதல் களுக்கு தக்கதாய் சரிக்கட்டாமல், ஒரு தகப்பனைப் போல மனந்திரும்பு கின்ற இருதயமுள்ளவர்களை அரவணைக்கின்றார். ஒரு மனிதன் தன் பிள் ளையைச் சுமந்துகொண்டு போவதுபோல, இந்நாள்வரையிலும் அவர் நம்மை காத்து வந்தார். அவருக்கு நன்றியை செலுத்துங்கள்.

**உபாகமம் 1:31**

**உங்கள் தேவனாகிய கர்த்தர் உங்களைச் சுமந்துகொண்டு வங்ககைக் கண்டீர்களே.**

**ஜெபம்**: தந்தையைப் போல தோளின்மேல் சுமந்து வந்த தேவனே, நான் அறிந்த நாட்களிலும், உணர்வற்று வாழ்ந்த நாட்களிலும், எனக்கு இரக்கம் பாராட்டி காத்து வந்த தயவிற்காய் உமக்கு நன்றி செலுத்துகின்றன். இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# தாயின் கருவில் தெரிந்து கொண்டவர்

> **சங்கீதம் 139:16**
> **என் கருவை உம்முடைய கண்கள் கண்டது**

இன்று மனிதர்கள் தங்ளுக்குள்ளே இரகசியங்களை பேசிக் கொள்கின்றார்கள். நாடுகள் தங்களுக்குரிய இரகசியங்களை மற்றவர்கள் அறியாதபடிக்கு பேணிப் பாதுகாக்கின்றார்கள். மனிதர்களுடைய மனதிலே, மற்றவர்கள் அறியாத புதிர்கள் அநேகமுண்டு. இப்படியாக மனிதர்கள் தங்களையும் தங்கள் மனதிலுள்ளவைகளையும் ஒளித்துக் கொள்ளும் நேரங்கள் உண்டு. ஆனால், தேவனுக்கு மறைவான காரியம் ஏது? கர்த்தாவே, நீர் என்னை ஆராய்ந்து, அறிந்திருக்கிறீர். என் உட்காருதலையும் என் எழுந்திருக்குதலையும் நீர் அறிந்திருக்கிறீர் என் நினைவுகளைத் தூரத்திலிருந்து அறிகிறீர். நான் நடந்தாலும் படுத்திருந்தாலும் என்னைச் சூழ்ந்திருக்கிறீர் என் வழிகளெல்லாம் உமக்குத் தெரியும். உம்முடைய ஆவிக்கு மறைவாக எங்கே போவேன்? உம்முடைய சமுகத்தைவிட்டு எங்கே ஓடுவேன்? நான் வானத்திற்கு ஏறினாலும், நீர் அங்கே இருக்கிறீர் நான் பாதாளத்தில் படுக்கை போட்டாலும், நீர் அங்கேயும் இருக்கிறீர்" என்று தேவ பக்தன் சர்வ வல்லமையள்ள தேவனுடைய தன்மைகளை குறித்து பாடியிருப்பதை பரிசுத்த வேதாகமத்தில் நாம் வாசிக்கின்றோம். நாம் தேவனை நம்முடைய கண்களால் காணாதிருக்கலாம், ஆனால் அவரோ நம்மை எப்போதும் காண்கின்றவராகவே இருக்கின்றார். அவர் நம்மை தாயின் கருவினிலே காப்பாற்றினார். என் அவயவங்களில் ஒன்றாகிலும் இல்லாதபோதே அவைகள் அனைத்தும், அவைகள் உருவேற்படும் நாட்களும், அவருடைய புஸ்தகத்தில் எழுதியிருந்தது. ஆம் பிரியமான சகோதர சகோதரிகளே, நம்முடைய பிதாவாகிய தேவன் நம்மேல் வைத்திருக்கும் அன்பை யாரால் கூற முடியும்? இந்த உலகத்திலுள்ள மனிதர்கள் உங்களை அறிந்து, சில காலங்கள் உங்களை பின்பற்றி, உங்களோடு உறவு கொண்டாடலாம். ஆனால் அதற்கு ஒரு எல்லை உண்டு. அதற்கு ஒரு ஆரம்பமும், ஒரு முடிவும் உண்டு. வஞ்சிக்கும் பிசாசானவன், வஞ்சனையினாலே உங்களை தனது பக்கமாய் இழுத்துக் கொள்ள வகை தேடி, பல வடிவங்களிலே உங்களை பின்பற்றி வருவான். உங்களை உருவாக்கும்படியல்ல, உங்களை நித்தியமாய் அழித்துப்போடும்படிக்கே வருகின்றான். ஆனால், தேவனாகிய கர்த்தரோ, யாவரும் பாவக்கட்டில் இருந்து விடுதலையாகி, நித்திய ஜீவனை பெற்றுக் கொள்ள வேண்டும் என்று, தாயின் கருவிலிருந்து பாதுகாத்து வருகின்றார். எனவே வேதனை உண்டாக்கும் வழிகளை விட்டு அவரையே பற்றிக் கொண்டு, நித்திய வழியிலே நடவுங்கள். தாயின் கருவில் தெரிந்தவர் ஒருபோதும் கைவிட மாட்டார்.

> **ஜெபம்**: என் இருதத்தை ஆராய்தறிகின்த தேவனே, வேதனை உண்டாக்கும் வழிகளைவிட்டு, நான் உம்முடைய அநாதி தீர்மானம் என்னில் நிறைவேறும்படி உம்முடைய வழியில் நடக்க கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# உலக தோற்றமுதல்...

ஒரு சமயம், ஒரு விசுவாசியாவன், “எனக்கு இந்த விஷயத்தில் நல்ல அறிவும் அனுபவமும் இருக்கின்றது, எனக்கு எல்லாம் புரியும், நான் செய்வது சரி, இது என் வாழ்வு” என்று தன் சொந்த கொள்கையிலே வைராக்கியமாக இருந்து வந்தான். காலங்கள் கடந்து சென்று, அவன் வாழ்விலே சூழ்நிலைகள் மாறிய போது, காரியமறியாத மூடனைப் போல நடந்து கொண்டேன் என்று மனவேதனை அடைந்தான். ஏனெனில், காலங்கள் அவனுடைய கையில் இல்லை. நாளை என்ன நடக்கும் என்று அறியாத மனிதனுடைய அறிவும் அனுபவமும் ஒரு குறுகிய வட்டத்திற்குள்ளேயே இருக்கின்றது. எதிர்காலத்தில் என்ன நடக்கும் என்பது அவனுக்கு அறியாத ஆழமாக இருப்பதினாலே, தற்போது அவனுக்கிருக்கும் தகவல்களின் அடிப்படையிலே வாழ்வின் முக்கிய தீர்மானங்களை எடுத்து விடுகின்றான். மனிதனானவன் காலத்திற்குள் கட்டுப்பட்டிருக்கின்றான். ஆனால், சர்வ வல்ல தேவனாகிய கர்த்தரோ காலத்தை கடந்தவர். காலங்களை உருவாக்கியவர் காலத்திற்கு கட்டுப்பட்டவரல்ல. உலகமும், பூமியும் தோன்றும் முன்னதாக என்றென்றும் இருக்கின்ற தேவனானவர், உலக தோற்றத்திற்கு முன்னதாகவே கிறிஸ்துவுக்குள் நம்மைத் தெரிந்து கொண்டார். இந்த உலகத்திலே, மனிதர்கள் உறவுகளை ஏற்படுத்துகின்றார்கள். ஒரு மனிதனாவன், தனக்கென்று ஒரு மனைவியை, வெளித்தோற்றம், செயற்பாடுகள், தகமைகள் அடிப்படையில் தெரிந்து கொண்டு, அவளை தன் மனைவி என்று உறவு பாராட்டுகின்றான். அதுபோலவே காலத்திற்கு காலம் மனிதர்கள் நண்பர்களை தெரிந்து கொண்டு, உறவு பாராட்டுகின்றார்கள். ஆனால், தங்கள் தெரிவுகள் தங்கள் விருப்பப்படி இருக்காதவிடத்து, உறவும், நட்பும் தணிய ஆரம்பிக்கின்றது. ஆனால், நம்மீது அன்புகூர்ந்த தேவனாகிய கர்த்தரோ, நாம் இந்த உலகத்தில் பிறப்பதற்கு முன்னதாக நம்மை தெரிந்து கொண்டார். இது ஏதேட்சையாக நடந்த காரியமல்ல. நம்முடைய செயற்பாடுகளையும், தகைமைகளையும், வெளித்தோற்றங்களையும் வைத்து அவர் நம்மை முன்குறிக்கவில்லை. நாம் இருக்கின்ற வண்ண மாகவே நம்மை அழைத்து, இந்த உலகத்தைவிட்டு, வேறு பிரிந்த வாழ்வு வாழு ம்படி முன்குறித்திருக்கின்றார். எனவே, நாம் இந்த உலகத்திற்கு ஒத்த ஒத்த வேஷந்தரியாமல், தேவனுடைய சித்தப்படி வேறு பிரிக்கப்பட்ட வர்கள் என்று அறிந்து உணர்ந்தவர்களாய், பரிசுத்த வாழ்விற்கு நம்மை ஒப்புக் கொடுப்போமாக.

**எபேசியர் 1:4**

அவர் உலகத்தோற்றத்துக்கு முன்னே கிறிஸ்துவுக்குள் நம்மைத் தெரிந்து கொண்டபடியே,

**ஜெபம்**: உலதோற்றத்திற்கு முன்னதாகவே என்னை தெரிந்த கொண்ட தேவனே, உம்முடைய அநாதி தீர்மானம் என் வாழ்வில் நிறைவேறும்படிக்கு, நான் உணர்வுள்ள வாழ்க்கை வாழ கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# கூட்டிச் சேர்க்கும் தேவன்

ஒரு மனிதனாவன், ஊர், பெயர், தேசம் எது என்று தெரியாதபடிக்கு, பல உபத்திரவங்களால் நெருக்கப்பட்டு, ஒதுக்கப்பட்டுப் போனான். அவன் செய்த நற்கிரியைகளுக்கு பலன் இனி இல்லை என்ற அளவிற்கு, எப்பக்கமும் அவனை சூழ சவால்களும் பிரச்சனைகளும் சூழ்ந்திருந்தது. நடுச்சமுத்திரத்திலே கடும் புயலிலே அகப்பட்டு, உதவிக்கு எவரையும் அழைக்க முடியாமல், தாழ்ந்து போகும் நிலையில் இரு க்கும் கப்பலைப் போல அவன் வாழ்க்கையிருந்தது. அப்படிப்பட்ட வேளையிலே கடலிலே இருக்கும் வெளிச்சவீட்டைப் போல, ஒரு வெளிச்சத்தை அவன் கண்டான். காரிருள் சூழ்ந்திருக்கும் வேளையிலே விடிவெள்ளி அவன் வாழ்க்கையிலே உதித்ததது. அந்த நாட்டின் ராஜாவானவன், ஆள்அனுப்பி அவனை கண்டு பிடித்தார். அவன் தகப்பனானவரும், அவன் குடும்பத்தாரும் செய்த நன்மைகளுக்கு கைமாறு கொடுக்கப்படவில்லை, என்று அறிந்த ராஜாவனான், அவனையும் அவன் குடுத்பத்தையும் படுகுழயிலிருந்து தூக்கி உயர்த்தி வைத்தான். பலரின் பார்வையில் நம்பிக்கையற்ற நிலையில் வாழ்ந்த அவன் வாழ்வு மறுமலர்சியடைந்தது. ஆம் பிரியமான சகோதர சகோதரிகளே, நம்முடைய தேவனானவர், தம்முடைய ஜனங்கள் அநே ஆண்டுகளாக, தேவனுடைய சத்தத்திற்கு செவி கொடுக்காமல், செய்து வந்த தொடர்ச்சியான மீறுதல்களின் நிமித்தம், சிறைப்பிடிக்கப்பட்டு போனார்கள். இனி அவர்களுக்கு ஒரு தேசம் இல்லை என்கின்ற நிலைக்கு அவர்கள் தள்ளப்பட்ட போதும், அவர் முன்குறித்த நாளிலே அவர்களை மீண்டும் கூட்டிச் சேர்த்தார். உங்களுடைய வாழ்விலும், எப்படிப்பட்ட காரணங்களாலும் பின்னடைவுகள் எற்பட்டு இருந்தாலும், அநாதரவாய் துரத்துண்டிருந்தாலும், மனதுருகின்ற தேவனாகிய கர்த்தரை நோக்கி பாருங்கள். இது எப்படி ஆகும்? எப்படி சாத்தியமாகும்? என்று சந்தேகங்களை விட்டு விட்டு, நம்பிக்கையிலே உறுதியாய் இருங்கள். உங்கள் வாழ்வை முற்றுமாய் அவரிடத்தில் ஒப்புக் கொடுங்கள். நீ பூமியின் கடையான திசைமட்டும் துரத்துண்டிருந்தாலும், “உன் தேவனாகிய கர்த்தர் உன் சிறையிருப்பைத் திருப்பி, உனக்கு இரங்கி, உன் தேவ னாகிய கர்த்தர் உன்னைச் சிதற அடித்த எல்லா ஜனங்களிடத்திலும் இருக்கிற உன்னைத் திரும்பச் சேர்த்துக்கொள்ளுவார். உன்னுடைய வர்கள் வானத்தின் கடையான திசைமட்டும் துரத்துண்டிருந்தாலும், உன் தேவனாகிய கர்த்தர் அங்கே இருக்கிற உன்னைக் கூட்டி, அங்கேயிருந்து உன்னைக் கொண்டுவந்து, உன்னை பெருகப் பண்ணுவார்.”

**உபாகமம் 30:4**

**உனக்கு நன்மைசெய்து, உன் பிதாக்களைப்பார்க்கிலும் உன்னைப் பெருகப்பண்ணுவார்**

**ஜெபம்**: மனதுருகின்ற தேவனாகிய கர்த்தாவே, என்னை சூழ்ந்திருக்கும் இருளை நீக்கும்படி என் வாழ்வில் தீபமாக வந்தவரே, எந்நிலையிலும் நான் உம்மேல் நம்பிக்கையாயிருக்க எனக்கு கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# உபயோகமற்ற உடைந்த பாத்திரம்

ஒரு செல்வந்தனின் வீட்டிலே அழகான இயற்கை மலர்க் கொத்தோடு காட்சிக்கு வைக்கப்பட்டிருந்த விலையுயர்ந்த பாத்திரமொன்று கீழே விழுந்ததால், சில இடங்களிலே வெடித்துப் போயிற்று. அதனால், அதிலுள்ள தண்ணீர் வெளியேறியது, ஆகவே, இனி அது உபயோகத்திற்கு உகந்ததல்லவென்று, அந்த வீட்டின் விசாரணைக்காரன் அதை வெளியே எறிந்து விட்டான். அழகான உபயோகமாயிருந்த அந்தப் பாத்திரமானது, தற்போது உடைந்த பாத்திரமாக தெருவின் குப்டித்தொட்டி அருகே வீசப்பட்டிருந்தது. செல்வந்தனின் வீட்டை அழகுபடுத்திய அந்தப் பாத்திரத்தை, தற்போது தெருவழியாக செல்லும் ஏழையும் விரும்பாத பாத்திரமாக மாறிவிட்டது. ஒரு நாள் அவ்வழியாக, தொலைவிலிருந்து ஒரு குயவன் வந்தான். அவன் எறிந்து கிடக்கும் அந்தப் பாத்திரத்தை கண்டு, அதை உற்றுப் பார்த்து, விலைபோகாத அந்தப் பாத்திரத்தை எடுத்துக் கொண்டு தன் தொழிற்சாலையில், அதை உடைத்து, மறுபடியும், மிக அழுகுள்ள பாத்திரமாக வனைந் தான். குப்பையிலிருந்த ஆகாததென்று கைவிடப்பட்ட பாத்திரம், தற்போது மிக விலையுயர்ந்த பாத்திரமாக குயவனுடைய கையால் மறுபடியும் வனையப்பட்டது. ஆம் பிரியமான சகோதர சகோதரிகளே, இலாபமுள்ள வரை மனிதர்கள் ஒருவனோடு பிரியமாய் நடந்து கொள்வார்கள். ஆனால், அவன் வாழ்க்கையின் நிலைமை மாறி, பின்னடைவுகள் ஏற்படும் போது, ஆகாதவன், பிரயோஜனமற்றவன் என்று அவனை தள் ளிவிடுகின்றார்கள். உண்மையிலே அந்த மனிதனானவன், உடைந்த பாத் திரம் போல, ஒரு ஆகாத நிலைக்கு தன்னை அறிந்தோ அறியாமலோ கொண்டு சென்றிருக்கலாம். ஆனால், அப்படியே வாழ்வு முடிந்து விட் டது என்று அவன் தன்னை மாய்த்துக்கொள்ளத் தேவையில்லை. நம்மை உருவாக்கி குயவனாகிய நம்முடைய கர்த்தருடைய கரத்திலே அவன் தன்னை ஒப்புக் கொடுத்தால், களி மண்ணாகிய எங்களை அவர் மறுபடியும் வனைகின்றவராக இருக்கின்றார். உங்களுடைய வாழ்க்கையிலும், தகுந்த காரணங்களால், நீங்கள் புறக்கணிக்கப்பட்டிருந்தாலும், மன ந்தளர்ந்து போகால், கரத்தரை நோக்கி: கர்த்தாவே, நீர் எங்களுடைய பிதா, நாங்கள் களிமண் நீர் எங்களை உருவாக்குகிறவர், நாங்கள் அனை வரும் உமது கரத்தின் கிரியை என்று உங்களை தாழ்த்தி அவரிடம் ஒப்புக் கொடுங்கள். நொருங்குண்ட இருதயத்தை அவர் ஒரு போம் புறக்கணிக்கமாட்டார்.

**ஏசாயா 64:8**

**கர்த்தாவே, நீர் எங்களுடைய பிதா, நாங்கள் களிமண்; நீர் எங்களை உருவாக்குகிறவர், நாங்கள் அனைவரும் உமது கரத்தின் கிரியை.**

**ஜெபம்:** நொறுங்குண்ட இருதயமுள்ளவர்களுக்குக் சமீபமாயிருக்கும் தேவனே, ஒன்றுக்கும் ஆகாத பாத்திரமாகிய என்னுள் உம்முடைய திவ்விய ஒளியை பிரகாசிப்பிக்கப் பண்ணியத்திற்காக உமக்கு நன்றி ஐயா! இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# பழக்க வழக்கங்கள்

ஒரு மனிதனானவன், அதிகாலையிலே எழுந்தவுடன், எதையும் செய்வதற்கு முன்னதாக, தேநீர் குடிக்கும் பழக்கமுடையவனாக இருந்தான். ஆண்டகள் கடந்து சென்றதும், சில மருத்துவ காரணங்களுக்காக, அந்தப் பழக்கத்தைவிட்டு, அதிகாலையிலே இளம் சூட்டு தண்ணீரை அருந்தும் வைத்தியர் ஆலோசனை கூறினார். அடுத்த நாள் அவன் காலையிலே எழுந்திருக்கும் போது, வழக்கப்படி அவன் தேநீர் தனக்கு தேவை என்று உணர்ந்து கொண்டான். ஆனால், தன் உடல் நலத்தை பேணும்படியாக, மருத்துவ ஆலோசனையை பின்பற்ற ஆரம்பித்தான். அந்த பழைய பழக்கத்தை மாற்றி, தண்ணீர் அருந்தும் புதிய பழக்கத்தை ஏற்படுத்துவதற்கு, அவனுக்க ஒரு சில மாதங்கள் சென்றது. தேநீர் அருந்தும் பழைய பழக்கம் எப்படி உண்டாயிற்று. ஒவ்வொரு நாளும் குறித்த நேரத்திலே அவன் அதை அருந்தி வந்ததால், அவன் மனதும், உடலும் அதற்கு பழக்கப்பட்டுவிட்டது. அந்தத் தேநீர் இல்லாமல், அவன் நாள் ஒரு நாளாகவே இருந்ததில்லை. அதுபோல மனிதர்கள் பழவிதமான பழக்கங்களை தங்கள் வாழ்விலே ஏற்படுத்திக் கொள்கின்றார்கள். இன்னுமொருவிதமாக சொல்லுவதென்றால், மனிதர்கள் சில பழக்கங்களுக்கு தங்களை அடிமைகளாக்கிக் கொள்கின்றார்கள் என்றும் கூறிக் கொள்ளலாம். அதுபோலவே, கர்த்தருக்கு பிரியமானவற்றை செய்வதில் நாம் நம்மை பழக்கப்படுத்திக் கொள்ள வேண்டும். அதிகாலையிலே எழுந்து ஜெபிப்து பலருக்கு மிகவும் கடினமாக காரியமாக தோன்றகின்றது. ஆனால் இரவிரவாக முழித்திருந்து பற்பல காரியங்களை செய்வற்கு தங்கள் உடலை பழக்கப்படுத்தி வைத்திருக்கின்றார்கள். எனவே, ஒரு புதிய பழக்கத்தை உருவாக்குவதற்கு, சில பழைய பழக்கங்களை விட்டவிட வேண்டும். பழைய பழக்கங்களிலே சில இன்பங்கள் உண்டாயிருக்கலாம். ஆதலால் விசுவாசிகளும்கூட அதைவிட்டுவிட மனதில்லாதவர்களாகி விடுகின்றார்கள். ஊரோடுகையில் ஒத்தோடு என்ற பிரகாரமாக நாட்டின் நடப்பிற்கு தங்களை வழக்கப்படுத்திக் கொள்கின்றார்கள். பிரியமானவர்களே, நாம் உலகமாகிய இந்த ஊரிலிருந்து, பரம ஊராகிய பரலோகத்திற்கென்று வேறு பிரிக்கப்பட்டிருக்கின்றோம். எனக்கு பரலோகத்திற்கு இட்டுச் செல்லும் திவ்விய சுபாங்களை உங்கள் வாழ்வில் பழக்கமாக்கிக் கொள்ளுங்கள். அவைகளையே உங்கள் பிள்ளைகளும் நடக்கையிலே கற்றுக் கொடுங்கள்.

**லேவியராகமம் 20:26**

**நீங்கள் என்னுடையவர்களாயிருக்கும்படிக்கு, உங்களை மற்ற ஜனங்களை விட்டுப் பிரித்தெடுத்தேன்**

**ஜெபம்:** அந்தகாரத்தினின்று தம்முடைய ஆச்சரியமான ஒளியினிடத்திற்கு வரவழைத்த தேவனே, பரலோகத்திற்குரியவைகளை நாடும் பழங்கங்களை என் வழக்கமாக்கிக் கொள்ள உணர்வுள்ள இருதத்தை தந்து நடத்துவீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# சபை கூடிவருதல்

இந்தப் பூவுலக வாழ்க்கையிலே மனிதர்கள் தாங்கள் அறியாத பல காரியங்களை சீக்கிரமாக தங்கள் வாழ்விலே பழக்க வழக்கமாக்கிக் கொள்கின்றார்கள். எடுத்துக் காட்டாக, மாணவர்கள் கல்வி கற்கும்படி கிழமை நாட்களிலே அனுதினமும் பாடசாலைக்கு சென்று வருகின்றார்கள். சில நாட்கள் பாடசாலைக்கு செல்வதற்கு மனவிருப்பம் இல்லாதிருக்கும் போதும், பாடசாலைக்கு செல்வதற்கு தங்களை பலவந்தம் பண்ணிக் கொள்கின்றார்கள். ஒருவன் பாடங்களை ஒழுங்காக முறைபடி கற்பதற்கு, பாடசாலைக்கு ஒழுங்காக செல்வது முதற்படியாக இருக்கின்றது. சில விதிவிலக்கான சந்தர்ப்ப சூழ்நிலைகளிலே, சில இடங்களிலே பாடசாலைக்கு செல்ல முடியாத சூழ்நிலைககள் ஏற்படுகின்றது அதுபோல பாடசாலை இல்லாத இடங்கள் இருக்கின்றது. அந்த சூழ்நிலைகளிலே, சிலர் வீட்டில் இருந்து கற்றுக் கொள்கின்றார்கள். அவர்களில் சிலர் தேர்ச்சியடைந்திருக்கின்றார்கள். ஆனால், அது விதிவிலக்கான சூழ்நிலையாகும். பொதுவாக பாடசாலைக்கு செல்ல விரும்பமில்லாதவன், விதிவிலக்கான சூழ்நிலைகளை சுட்டிக்காட்டி, அவைகளை சாட்டுப்போக்காக பேசிக் கொள்வான். பாடசாலைக்கு செல் கின்ற மாணவர்கள் எல்லாரும் ஒழுங்காக கற்று தேர்சியடைவதில்லை. சிலர் தங்களுக்கு கொடுக்கப்பட்ட சந்தர்பங்களை வீணடிக்கின்றார்கள். ஆனால், ஒரு நல்ல மாணவனானவன் பாடசாலைக்கு ஒழுங்காக செல்வதை வழக்கமாக்கிக் கொண்டு, அங்கு கற்பிக்கும் பாடங்களை அனுதினமும் மீள்ஆய்வு செய்து கற்பதை தன் வாழ்வின் பழக்கமாக்கிக் கொள்கின்றான். பிரியமான சகோதர சகோதரிகளே, மேற்கூறிய சம்பவத்தைப் போலவே, நாம் முதலாதாக தேவஆலயத்திற்கு செல்வதை வழக்கமாக்கிக் கொள்ள வேண்டும். தேவ ஆலயத்திற்கு செல்வதற்கு சாட்டுப் போக்கு சொல்கின்றர்கள் யார் என்பதை நீங்கள் இப்போது அறிந்திருக்கின்றீர்கள். நீங்கள் வயது, வியாதி, மற்றும் உங்கள் கட்டுப்பாட்டிற்குள் இல்லாத விதிவில க்கான சூழ்நிலைகளில்இருந்தால், அதை தேவன் அறிந்திருக்கின்றார். ஆனால், நீங்களோ உங்களுக்கென்று விதிவிலக்கான சூழ்நிலைகளை ஏற்படுத்திக்கொள்ளாமல், உங்களுக்கு கிடைக்கும் நல்ல சந்தர்பங்களிலே, தேவனுக்குரியவைகளை கற்றுக் கொள்வதை பழக்கப்படுத்திக் கொள்ளுங்கள்.

**தானியேல் 6:10**

**அங்கே தான் முன் செய்து வந்தபடியே, தினம் மூன்று வேளையும் தன் தேவனுக்கு முன்பாக முழங்காற் படியிட்டு ஜெபம்பண்ணி, ஸ்தோத்திரம் செலுத்தினான்.**

**ஜெபம்**: அன்பின் பரலோக தந்தையே, நற்செயல்களை செய்ய வேண்டியதெல்லதாவற்றையும் நீர் எனக்கு ஈவாக கொடுத்திருக்க, நான் குறைகூறவதை என் வாழ்வில் வழக்கப்படுத்தாதபடிக என்னை காத்துக் கொள்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# படிப்படியான வளர்ச்சி

ஒரு விசுவாசியானவனுக்கு இரண்டு குமாரர்கள் இருந்தார்கள். அவர்களில் இளையவன், தனக்கு கிடைக்கும் சில்லறை காசுகளை சிறிது சிறிதாக சேர்த்து, வருட முடிவிலே, நேர்த்தியாக அச்சிடப்பட்ட பரிசுத்த வேதாகமபுத்தகத்தை வாங்கிக் கெொண்டான். மூத்தவனோ, தன் இளையவனை நோக்கி: வேதாகம புத்தகத்தை வாங்கினால் போதாது, அதை படிக்க வேண்டும் என்று அவனை கடிந்து கொண்டான். ஆர்வத்தோடு அந்த வேதாகமபுத்தகத்தைவாங்கிற இளையவன், தினமும் அதை வாசிக்க ஆரம்பித்தான். சில கிழமைகளாக அதை அவதானித்து வந்த மூத்தவன், தன் தம்பியை நோக்கி: இராப்பகலாக வேத வார்த்தைகளை வாசித்தால் போதாது, அதை நீ கைகொள்ள வேண்டும் என்று அதற்றிக் கூறினான். சில நாட்களுக்கு பின்பு, மூத்தவனின் கூட்டாளியொருவன், அவனுக்குகெதியாரக தீமை செய்ததால், மூத்தவன் மூர்க்கங் கொண்டு, தன் நண்பனோடு சண்டை செய்ய விரைந்து சென்றான். அதை கண்ட இளையவன், மூத்தவனை நோக்கி: அண்ணா, தீமைக்கு தீமை செய்யாமல், நன்மை செய்ய வேண்டும். அவனை போல நீயும் மாறிவிடாமல், அவனை மன்னித்து விட்டு விடு என்று பணிவாக கூறினான். அதை கேட்ட மூத்தவன், தன் தம்பியின் மேல் மிகவும் கோபம் கொண்டு, நீ எனக்கு போதிக்க ஆரம்பித்து விட்டாயா என்று அவனை கடுமையாக கண்டித்து பேசினான். ஆம் பிரியமான சகோதர சகோதரிகளே, மூத்தவன் தன் தம்பிக்கு கூறியதுபோல, பரிசுத்த வேதாகமம் வீட்டில் பார்வைக்கு இருந்தால் போதாது, அதை வாசிக்க வேண்டும், பின் வாசித்தவைகளை நாளாந்த வாழ்விலே கைக் கொள்ள வேண்டும் என்பது உண்மை. ஆனால், அவன் தன் தம்பியை ஊக்குவித்து உற்சாகப்படுத்தாமல், இளையவன் செய்யும் நற்கிரியைகளை குறித்து குறைவாகவே பேசிக் கொண்டான். வேதத்தை வாசிக்க, முதல்படியாக வீட்டிலே வேதாகமம் இருக்க வேண்டும், வேத வசனத்தை தியானம் செய்வதற்கு முன் அதை வாசித்து அறிந்திருக்க வேண்டும், வேத வார்த்தைகளை வாழ்வில் கைகொள்வதற்கு முன் அதை தியானிக்க வேண்டும் என்பதை மூத்தவன் உணராதிருந்தான். இன்று உங்கள் மனநிலை யாருக்கு ஒத்திருக்கின்றது? நீங்கள் மூத்தவனைப் போலவோ அல்லது இளையவனைப் போலவோ, யாரைப் போல இருக்கின்றீர்கள்? நற்கிரியைகளை செய்வதற்கு மனதார ஒருவரை ஒருவர் ஊக்குவியுங்கள். மற்றவர்கள் கிறிஸ்துவுக்குள் வளர்ந் பெருகுவதற்கு ஒத்தாசையாக இருங்கள்.

**1 தெச 5:11**

ஒருவருக்கொருவர் பக்திவிருத்தி உண்டாகும்படி செய்யுங்கள்.

**ஜெபம்**: என்மேல் நீடிய பொறுமையாக இருந்து வரும் தேவனே, மற்றவர்ளுடைய அற்பமான ஆரம்பத்தை அசட்டை செய்யாமல், அவர்களை ஊக்குவித்து, உம்மண்மை சேர்க்க நல்மனத்தை தந்து வழிடத்துவீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# காத்திருக்க பழகிக்கொள்ளுங்கள்

திருமணமாகிய தம்பதிகள், கணவன் மனைவியாக, ஓர் இடத்திலே சேர்ந்து வாழாமல், வெவ்வேறு இடங்களிலே வாழ்ந்து கொண்டு, நாங்கள் ஒற்றுமையாக, ஒருமனமாக இருக்கின்றோம் என்று கூற முடியுமோ? அவர்கள் ஒன்றாக வாழும் போது, அவர்களுக்கிடையிலே ஏற்படும் கருத்து முரண்பாடுகள், வேற்றுமைகள் யாவையும், வேத வார்த்தைகளின்படி மேற்கொண்டு, ஒருவரை ஒருவர் அறிகின்ற அறிவிலே வளர்ந்து, ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுத்து, ஒருவர் பெலவீனத்திலே மற்றவர் பெலனாய் இருந்து வாழும் போதே, அவர்கள் இருவரும் இசைந்த ஆத்துமாக்களாய் இருப்பார்கள்.சபையிலே ஒன்றாய் கூடி ஜெபிக்க மனதில்லாமல், நான் வீட்டிலே தனியே ஜெபிப்பேன் என்று கூறுபவன், ஏகசிந்தை, ஒருமனம், ஐக்கியம் என்பவற்றைக் குறித்து எப்படி அறிந்து கொள்வான். அவன் ஏற்கனவே பிரிவினையுடையவனாக இருப்பான ல்லவா. கணவன் மனைவிக்கிடையில் கருத்து முரண்பாடுகள் சபையின் விசுவாச மார்க்கத்தாருக்குள் வரும் போது, அவர்கள் என்ன செய்ய முடியும்? சபை கூடுதலை தவிர்த்துக் கொள்ள முடியுமா? சபைக்குச் செல்லாமல் தனியே வீட்டிலிருந்து கொண்டே ஆராதிப்பது சரியாகுமா? தெரிவுகள் யாவும் அவரவருக்குரிய சுதந்திரம். ஆனால், வேதவார்த்தையை மீறி ஒருவன் நடந்து கொண்டு, தான் பிரச்சனைகளுக்கு தப்பி வாழ்கின்றேன் என்று கூறுபவனாக இருந்தால், அவன் தேவனுக்கு கீழ்ப்படியாமல் இருப்பதற்கு தன்னை பழக்கப்படுத்திக் கொள்கின்றான். சவால்கள், பிரச்சனைகள், உபத்திரவங்கள் வரும் போது, அவைகளை வேத வார்த்தைகளின்படி தீர்த்து கொள்பவனே தன்னை தேவனுக்கு கீழ்படிந்திக்கும்படி பழக்கப்படுத்திக் கொள்கின்றான். பிரச்சனைகளை தீர்த்து வைப்பதற்கு, வேறொருவன் இடையூறாக இருக்ககும் போது, கர்த்தருக்காய் காத்திருக்க தன்னை பழக்கிக் கொள்கின்றவன், தான் வெட்க மடையாதிருக்கவும், இறுதியிலே ஜெயம் கொள்ளவும் தன்னை பழக்கிக் கொள்கின்றான். எனவே, வேத வார்த்தைகளின்படி தன் வாழ்வை வாழ பழகிக் கொள்கின்றவன், வேத வார்த்தைளின்படி, வேத வார்த்தைகளால் வெற்றியடைவான். அதை மீறி நடக்கின்றவன், அவன் கீழ்படியாதவனாக இருப்பதனால், தன்னை தானே தோல்விக்கு பழக்கிக் கொள்கின்றான். நீங்களோ வெற்றி சிறக்கும்படி அழைக்கப்ட்டிருக்கின்றீர்கள். எனவே காத்திருக்க பழகிக் கொள்ளுங்கள்.

**ஏசாயா 40:31**

**கர்த்தருக்குக் காத்திருக்கிறவர்களோ புதுப்பெலனடைந்து, கழுகுகளைப்போலச் செட்டைகளை அடித்து எழும்புவார்கள்**

**ஜெபம்:** என் தேவனாகிய கர்த்தாவே, எல்லா சூழ்நிலைகளிலும் நான் உம்முடைய வார்த்தைக்கு கீழ்படிந்து, அதன்படி வாழ கற்றுக் கொள்ள எனக்கு ஞானமுள்ள இருதயத்தை தந்து வழி நடத்திச் செல்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கின்றேன் ஆமென்.

**சனி | ஆகஸ்ட் 10** 📖மாலை வாசகம் – சங்கீதம் 62:1–5

# தேவ நீதி வெளிப்படும்

சவுல் என்னும் ராஜாவானவன், தேசத்தை ஆளும்படிக்கு தேவனால் நியமிக்கப்பட்டிருந்தான். தேவ ஊழியராகிய சாமுவேல், தேவனுக்கு பலிகளை செலுத்தும்படி தேவனால் நியமிக்கப்பட்டிருந்தார். ஒரு சமயம், தேவ மனுஷனாகிய சாமுவேல் வரத் தாமதமாகின்றது என, காத்திருக்க மனதில்லாதவனாய், தேவ ஊழியரால் செய்யும்படி நியமிக்கப்பட்ட சர்வாங்கதகனபலியைச் சவுல் ராஜாவானவன், தான் செய்யத் துணிந்தான். தேவனுக்கு பலிகளை செலுத்துவது நன்மையான காரியமாக இருந்தபோதும். தேசத்தின் ராஜாவானவன், தேவனுடைய ஒழுங்கை மீறி, தானே பலி செலுத்தும்படி துணிகரம் கொண் டான். அவன், தான் பலி செலுத்துவது தேவனுக்கு பிரியமான காரியம் என்று எண்ணினான், ஆனால், அவனுடைய பலியிலே, மீறுதலும், துணிகரமும் இருந்ததால், தேவன் அந்த பலியின்மேல் பிரியமாக இருக்கவில்லை. வீட்டிலே, வேலையிலே, கல்விநிலையங்களிலே, கடைத் தெருக்களிலே, சமூகத்திலே, ஊரிலே, தேசத்திலே, உலகத்திலே எங்கும் பிரச்சனைகளும், ஒழுங்கின்மைகளும் உண்டு. அவை யாவும் மனிதர்களால் ஏற்படுத்தப்பட்டவைகள். அவ்வண்ணமாகவே விசுவாசிகள் சபை ஐக்கியத்தில் கூடிவரும் போது, அவ்வப்போது, கருத்து முரண்பாடுகளும், வாக்குவாதங்களும், சண்டைகளும், பிரவினைகளும் ஏற்படுகின்றது. இது தேவனுடைய ஆவியினாலே உண்டாகின்ற காரியமல்ல. மாறாக, விசுவாசிகள் தேவனுடைய வேளைக்கும், அவர் நியமித்த ஒழுங்குக்கும் காத்திருக்க மனதில்லாமல், தங்கள் சொந்த மாம்ச இச்சைகளின்படி பிரச்சனைகளை தீர்க்க அணுகும் போது, அங்கே கலகங்களே ஏற்படுகின்றது. சபைக்கு நன்மை செய்கின்றோம், நீதியை நடப்பிக்கின்றோம் என்று எண்ணி மாம்சத்திலே செயற்படுகின்றவர்கள், தேவ நீதிக்கு எதிர்த்து நிற்கும்படி தங்களை பழக்கப்படுத்திக் கொள்கின்றார்கள். பிரியமானவர்களே, தேவனுடைய சபையை குழப்பும்படி, உங்களோடு ஒரு கூட்டம் சேரந்திருந்தாலும், தேவனுடைய சபையை குழப்பதற்கு காரணராயிருந்தால், அது தேவனுடைய பார்வையிலே பிரியமாயிருக்குமோ? அருமையான சகோதர சகோதரிகளே, யாவரும் கேட்கிறதற்குத் தீவிரமாயும், பேசுகிறதற்குப் பொறுமையாயும், கோபிக்கிறதற்குத் தாமதமாயும் இருக்க பழகிக் கொள்ளுங்கள். தேவ நீதி நிறைவேறும்வரை காத்திருக்க பழகிக் கொள்ளுங்கள்.

**சங்கீதம் 27:14**

**கர்த்தருக்குக் காத்திரு; அவர் உன் இருதயத்தை ஸ்திரப்படுத்துவார்; திடமனதாயிருந்து, கர்த்தருக்கே காத்திரு.**

**ஜெபம்**: பரலோக தேவனே, என்; உள்ளத்தில் நாட்டப்பட்டதாயும் என் ஆத்துமாவை இரட்சிக்க வல்லமையுள்ளதாயுமிருக்கிற உம்முடைய வசனத்தைச் சாந்தமாய் ஏற்றுகொள்ள எனக்கு கற்றுத் தந்து நடத்திச் செல்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

ஞாயிறு | ஆகஸ்ட் 11 | 📖 மாலை வாசகம் – சங்கீதம் 141:3

# வேறுபிரிக்கப்பட்ட வாழ்க்கையின் ஆரம்பம்

ஒழுக்க நெறிகளோடு வாழ்ந்து வந்த மனிதனானவன், தன் வீட்டிலே நண்பர்கள், உறவினர்கள் மத்தியிலே பேசும் போது, மற்றவர்களுடைய ஊரையும், அதன் வழக்கங்களையும் சொல்லி, பேசுவது அவனுக்கு வழக்கமாக இருந்ததால், நாளடைவிலே அது அவனுடைய பழக்கமாயிற்று. வெளியே செல்லும் போது, மற்ற மனிதர்கள், விசுவாசிகள் முன்னதாக, அவன் தான் வீட்டிலே பேசுவதைப் போல பேசாமல், யோக்கியமானதை பேசி வந்தான். ஆனால், ஒரு நாள், பல மனிதர்கள் கூடியிருந்த விருந்தொன்றிலே, ஏதோ காரணத்திற்காக, இன்னுமொரு விருந்தாளியுடன் அவனுக்கு கருத்து முரண்பாடு ஏற்பட்டு, அது வாக்குவாதமானபோது, தன்னையறியாமலே, அவன் வாயிலிருந்து ஊரையும், வழக்கங்களையும் குறிதத காரியங்கள் வெளிப்பட்டது. அவன் அதைக்க கட்டுபடுத்துவதற்கு முன்னதாக அந்த வார்த்தைகள் சென்று, செய்யவேண்டிய பாதகமான விளைவுகளை செய்து முடிந்து விட்டது. தேவனுக்கென்று வேறு பிரிக்கப்பட்ட சகோதர சகோதரிகளே, வேறு பிரிக்கப்பட்ட வாழ்க்கையானது எங்கே ஆரம்பிக்க வேண்டும்? அது உங்கள் வீட்டில் ஆரம்பிக்க முன்னதாக, உங்கள் மனதிலே ஆரம்பிக்க வேண்டும். பழைய மனுஷனுக்குரிய மோசம் போக்கும் சிந்தையும், பேச்சும், அதைக் குறித்த ஆசையும், முற்றாக உள்ளத்திலிருந்து அகற்றப்பட வேண்டும். வீட்டிலே எதையும் பேசுவதற்கு உங்களுக்கு உரிமையிருக்கலாம். ஆனால், “உங்களில் ஒருவன் தன் நாவை அடக்காமல், தன் இருதயத்தை வஞ்சித்து, தன்னை தேவபக்தியுள்ளவனென்று எண்ணினால் அவனுடைய தேவபக்தி வீணாயிருக்கும்.” இருதயத்தின் நிறைவினாலே வாய் பேசும். எனவே, இருதயத்தை தேவ வசனங்களினால் நிறைத்து வைக்க பழகிக் கொள்ளுங்கள். உங்கள் வீட்டிலும், வெளியிலும், உங்கள் மனதிலும் உங்கள் பேச்சு தேவ வசனத்தின்படி தூய்மையுள்ளதாக இருப்பதாக. அப்படி செய்யும் போது, மனக்குழப்பங்கள் ஏற்படும் போதும், தேவனுடைய வார்த்தையே உங்கள் வாயிலிருந்து புறப்படும். பொல்லாத மனுஷன் பொல்லாத பொக்கிஷத்திலிருந்து பொல்லாதவைகளை எடுத்துக்காட்டுகிறான். “மனுஷர் பேசும் வீணான வார்த்தைகள் யாவையும் குறித்து நியாயத்தீர்ப்புநாளிலே கணக்கொப்புவிக்கவேண்டும்” என்று ஆண்டவராகிய இயேசு கூறியிருக்கின்றார்.

**மத்தேயு 12:35**

**நல்ல மனுஷன் இருதயமாகிய நல்ல பொக்கிஷத்திலிருந்து நல்லவைகளை எடுத்துக் காட்டுகிறான்**

**ஜெபம்:** என்னை வேறுபிரித்த தேவனே, உமக்கேற்றவைகளை சிந்தித்து உமக்கேற்றவைகளை நான் வீட்டிலும் வெளியிலும், என் மனதிலும் பேச பழகிக் கொள்ளும்படிக்கு எனக்கு உணர்வுள்ள இருதயத்தைத் தந்து வழிநடத்துவீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

திங்கள்| ஆகஸ்ட் 12 | 🕮 மாலை வாசகம் – சங்கீதம் 119:105

# "சடங்குகள்"

ஒரு ஊரிலே நடந்த திருமணத்தின் வைபவங்கள் யாவும் மிகவும் நேர்த்தியாகவும், ஒழுங்காவும், சிறப்பாகவும் நடைபெற்றது. திருமண சம்பந்தத்தின் ஆரம்பம் முதல், திருமண நாளின் கொண்டாட்டம், மற்றும் நாலாம் சடங்கு வரைக்கும், விசாரிப்புக்கள், விருந்தோம்பல்கள், பொருத்தம் பார்த்தல், கொண்டாட்டங்கள் யாவற்றிலும் எல்லா நீதியும் நிறைவேற்றப்பட்டது. திருமணத்தை நடத்திய பெற்றோர் மனத்திருப்தியடைந்தார்கள். ஆனால், திருமணமாகிய இளம் தம்பதிகள், தங்கள் மனங்களானது ஒருவரோடொருவர் பொருந்தவில்லை என்பதை ஆரம்பத்திலிருந்தே அறிந்து கொண்டார்கள். அதன் முடிவு என்னவாய் இருக்கும்? பிரியமான சகோதர சகோதரிகளே, இந்த சம்பவத்தை மையமாக வைத்து சடங் காச்சாரங்களை நிறைவேற்றுதலைக் கற்றுக் கொள்ளுங்கள். திருமணத்தின் சடங்குகள் யாவும் நேர்த்தியாகவும், ஒழுங்காவும், சிறப்பாகவும் இருந்தது. ஆனால், உண்மையிலே அங்கே திருமணம் நடைபெறவில்லை. திருமணம் என்பது கொண்டாட்டமா? அல்லது கணவன் மனைவி ஒன்றாக இணைந்து கொள்ளுதலா? திருமணத்தில் எதை கொண்டாடுகின்றீர்கள்? சற்று சிந்தித்துப் பாருங்கள். அதாவது, கணவனும் மனைவியும் மனவிருப்பத்துடன் இணைந்து கொள்ளாமல் இருந்தால் அது உண்மையிலே திருமணமாக இருக்க முடியாது. அது போலவே, உங்கள் கிறிஸ்தவ வாழ்க்கையானது, மதச் சடங்காச்சாரமாகாதபடிக்கு எச்சரிக்கையுள்ளவர்களாக இருக்க வேண்டும். ஞானஸ்நானத்தில் ஆரம்பித்து எல்லாப் படிகளையும் கடந்து சென்று, ஆலயத்திற்கு தவறாமல் சென்று, பெருநாட்களை அனுசரித்து வருகின்ற போதிலும், ஒருவன் கிறிஸ்துவிலும், அவருடைய வார்த்தைகள் அவனிலும் நிலைத்திருக்கவில்லையென்றால் அவனுக்கு கிறிஸ்துவோடு ஐக்கியம் இல்லை. கிறிஸ்துவின் சாயலிலே வளரும் வளர்ச்சியோ அதைக் குறித்த எண்ணமோ இல்லை. முதல்படியாக, கிறிஸ்துவோடு இணைந்திருப்பதிலே ஆரம்பித்து, அந்த இணைப்பிலே தரித்திருந்து உறுதியாய் வாழ்வதற்கு நம்மை பழக்கிக் கொள்ள வேண்டும். அந்த பழக்கம் இல்லாமல், ஆலயத்திற்கு செல்வதையும், பெருநாட்களை அனுசரிப்பதையும் பழக்க மாக்கிக் கொண்டால், மேற்கூறிய திருமணத்தைப் போல, வாழ்ககை யானது ஒரு மதச் சடங்காச்சாரமாகவே இருக்கும்.

**யோவான் 15:6**

**ஒருவன் என்னில் நிலைத்திராவிட்டால், வெளியே எறியுண்ட கொடியைப்போல அவன் எறியுண்டு உலர்ந்து போவான்;**

**ஜெபம்**: நித்திய ஜீவனுக்கென்று என்னை அழைத்த தேவனே, ஆரம்பம் முதல், முடிவுபரியந்தம் நான் உம்முடைய வார்த்தையில்; உறுதியாய் நிலைத்திருந்து கனி கொடுக்க என்னை வழிநடத்திச் செல்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# செய்து காண்பியுங்கள்

இந்த பூமியிலே ஒரு பிள்ளையானது பிறந்த நாளிலிருந்து, நன்மையை விரும்பும் பெற்றோர், ஆசிரியர், ஊழியர், பெரியோர் யாவரும், நல மான காரியங்களை பிள்ளைக்கு கற்றுக் கொடுகின்றார்கள். நாள டைவிலே பிள்ளையானது கற்கும் காரியங்கள் யாவும் அந்தப் பிள் ளையின் பழக்கமாகிவிடுக்கின்றது. பாடசாலைக்கு ஒழுங்காக செல்லு தல், ஆலயத்திற்கு தவறாமல் செல்லுதல், ஆலயத்திலே தேவ ஊழியங்களில் உதவி யாக இருத்தல், இப்படியாக பற்பல நற்பழக்கவழக்கங்க ளையுடையவர்களாக பிள்ளை களை பெற்றோர் வளர்த்து வருகின்றார்கள். இவைகளு டன் தரித்து நின்றுவிடாமல், இவைகள் ஏன் செய்கின்றோம் என்ப தையும், அதன் கருப்பொருளையும், பெற்றோர், ஆசிரியர, ஊழியர் பெரியோர், பிள்ளைகளுக்கு கற்றுக் கொடுப்பது மிகவும் அவசியமா னது. அதாவது, பாடாசலைக்கு ஏன் செல்கின்றோம்? பாடங்களை படி த்து தேர்ச்சியடையும்படிக்காக செல்கின்றோம். அதன்பின்னர், தேர்ச் சியதைவைகளை நாளாந்த வாழ்க்கையில் நடைமுறைப்படுத்த வேண் டும். ஆலயத்திற்கு ஏன் செல்கின்றோம்? தேவனுடைய அநாதி தீர்மானம் நம்முடைய வாழ்வில் நிறைவேறும்வரைக்கும், அவரை ஆராதித்து, தேவ வார்த்தைகளை கேட்டு கற்றுக் கொள்வதற்காகவே செல்கின் றோம். அதன்பின்னர், கற்ற வார்த்தைகளை, பிள்ளைகள் கைகொள்ளு ம்படி க்கு, பெற்றோர் அவர்களை அந்த வழியிலே நடத்தி, தங்கள் வாழ் விலே அவைகளை நடைமுறைப்படுத்திக் காண்பித்து, அவற்றை பிள் ளைகளின் பழக்க வழக்கமாக்கிக் கொள்ள வேண்டும். எடுத்துக்காட் டாக, ஆலயத்திலே சென்று “நன்றியறிதலுள்ளவர்களாக இருங்கள்” என் பதை பிள்ளைகளுக்கு கற்றுக் கொடுக்கின்றோம். ஒருவர் பிள்ளைக்கு பரிசுப்பொருளை கொடுக்கும் போதோ, அல்லது ஒருவர் பிள்ளைகளின் முன்னேற்றத்திற்காக நற்கிரியைகளை செய்யும் போதோ அதற்கு நன்றி கூறக் கற்றுக் கொடுக்க வேண்டும். பின்பு, அந்தக் கிரியைகள் எவ்வ ளவு சிறிதாக இருந்தாலும், வாழ்க்கையின் நடைமுறையல் அதைக் குறி த்து நன்றியறிதலுள்ளவர்களாக இருக்கும்படி பயிற்சிவிக்க வேண்டும். இப்படியாக, மன்னிப்பு வழங்க, மன்னிப்பை கேட்டு பெற்றுக் கொள்ள, பெரியோருக்கு கீழ்படிவுள்ளவர்களாக இருக்க, நீடிபொறுமையுள்ளவர்க ளாக, பெற்றோர், தங்கள் பிள்ளைகளுக்கு தங்கள் வாழ்க்கையில் முன் உதாரணமாக இருந்து கற்றுக் கொடுக்க வேண்டும்.

**நீதிமொழிகள் 22:6**

பிள்ளையானவன் நடக்கவேண்டிய வழியிலே அவனை நடத்து; அவன் முதிர்வயதிலும் அதை விடாதிருப்பான்.

**ஜெபம்:** மறுரூபமாகும்படிக்கு என்னை அழைத்த தேவனே, உம்முடைய அநாதி தீர்மானம் என் வாழ்வில் நிறைவேறும்படிக்கு கற்றவைகளை என் வாழ்வில் நான் கடைப்பிக்க என்னை வழிநடத்திச் செல்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

புதன் | ஆகஸ்ட் 14 | 🕮 மாலை வாசகம் – நீதிமொழிகள் 17:14

# நன்மையானவைகளை கற்றுக் கொடுங்கள்

ஒரு ஊரிலிருந்த சனசமூக நிலையத்தினால், அந்த ஊரின் வருடாந்த திருவிழா நடாத்தப்பட்டது. அந்த விழாவின் முதலாம் நாளின் பெற்ற இராத்திரியிலே, அங்கிருந்த நிர்வாக உறுப்பினர்களும் அவர்களின் குடும்பத்தாரும், அடுத்த நாளுக்குரிய ஆயத்தங்களை செய்து கொண்டிருந்தார்கள். அந்த வேளையிலே, ஒரு சிரேஷ்ட நிர்வாக உறுப்பினரது, மகனானவன், அங்கிருந்த மேளமொன்றை பலத்த சத்தமாக அடித்துக் கொண்டிருந்தான். அதைக் கண்ட ஊரின் மூப்பரொருவர், அவனருகே சென்று, தம்பி, நேரம் பதினொருமணியாகிவிட்டது,ஊர் ஜனங்கள் உறுங்குகின்ற வேளை. எனவே, நீ இந்த மேளத்தை அடிப்பதை நிறுத்திவிடு என்று அவனை தடுத்து நிறுத்தினார். அந்த வாலிபனும், அரைமனதோடு அதை நிறுத்திவிட்டு சென்று விட்டான். அதைக் தூரத்திலிருந்து கண்ட பெற்றோர், மகனை அழைத்து, அந்த மனிதனின் சொல்லை கேட்க நீ யார்? உன்னை கட்டுப்பத்த அவன் யார்? நீ போய் மறுபடியும் மேளத்தை அடித்து பயிற்சிசெய் என்று அவனை தூண்டி விட்டார்கள். வைத்தார்கள். அவன் மறுபடியும் சென்று மேளத்தை அடிப்பதை கண்ட மற்றய நிர்வாக உறுப்பினரும், ஊரின் மூப்பர்களும் அதிர்ச்சி அடைந்தார்கள். பிரியமானவர்களே, சனசமூக நிலையத்தின் முக்கிய பொறுப்பிலுள்ள பெற்றோர், தங்கள் மகனானவனுக்கு, எப்படி குழப்பத்தை ஏற்படுத்த வேண்டும் என்பதை கற்று கொடுத்தார்கள் என்பதை பாருங்கள். அந்த பெற்றோரானவர்கள், சொட்டுச் சொட்டாக மதகுகள் வழியாக வடிந்து கொண்டிருக்கும் தண்ணீரை, அடைத்துக் போடும்படிக்கு கிரியைகளை நடப்பிக்காமல், கசிந்து கொண்டிருக்கும் தண்ணீர் ஊரிலே வெள்ள மாகும்படிக்கு, மதகுகளை திறந்து விடுகின்ற மனிதர்களுக்கு ஒப்பாக இருந்தார்கள். பிரியமானவர்களே, கிறிஸ்துவின் சிந்தையை தரிக்கு ம்படிக்கு அழைப்பைப் பெற்ற நீங்கள், உங்கள் பிள்ளைகளுக்கும், மற்றவர்களுக்கும் உங்கள் வாழ்வியல் நடைமுறை வழியாக எதைக் கற்று கொடுகின்றீர்கள். சிறுக விதைக்கின்றவன் சிறுக அறுப்பான் என்கின்ற உண்மையை மறந்துபோய்விடாதிருங்கள். ஒருவன் நன்மையை விதைத்தால், அதை பன்மங்காகஅறுப்பான். ஒருவன் தீமையை விதைத்தால், அதை அவன் பன்மடங்காக அறுப்பான். “சண்டையின் ஆரம்பம் மதகைத் திறந்து விடுகிறதுபோலிருக்கும் ஆதலால் விவாதம் எழும்பு முன் அதை விட்டு விடு” என்கின்ற பிரகாரம், குறைகளை அனல்மூட்டி எரியவிடும்படியல்ல, குறைவுகளில் நிறைவாயிருக்க அழைக்கப்பட்ட நீங்கள், நிறைவானவைகளை நாடி அவைகளையே மற்றவர்களுக்கும் கற்றுக் கொடுங்கள்.

**கலாத்தியர் 6:7**

மனுஷன் எதை விதைக்கிறானோ அதையே அறுப்பான்.

**ஜெபம்:** அழியாத நித்திய ராஜ்யத்திற்காக என்னை அழைத்த தேவனே, என் வாழ்வின் நோக்கத்தை நான் மறந்து போய்விடாமல் எப்போதும் விழிப்புள்ளவனாக வாழ உணர்வுள்ள இருயதத்தை தந்து வழிநடத்துவீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

வியாழன் | ஆகஸ்ட் 15 | 📖 மாலை வாசகம் – மத்தேயு 6:1 – 4

# மனதார நன்றி செலுத்துங்கள்

**கொலோசெயர் 3:15**

நன்றியறிதலுள்ளவர்களாயுமிருங்கள்

ஊரிலுள்ள ஒரு மனிதனானவன், பல ஆண்டுகளுக்கு முன்னதாக, ஒரு விசுவாசியானவனின் இக்கட்டான சூழ்நிலையிலிருந்து, அவனைக் விடுவித்து, அவனுக்கு நன்மை செய்தான். பல ஆண்டுகள் கடந்து சென்ற பின்னர், அந்த விசுவாசியானவன், ஏதோ ஒரு காரணத்திற்காக, அந்த மனிதனானவனை நோக்கி: "நீ அன்று, பெரிதாக என்ன செய்தாய்? ஒரு அற்மான பண உதவியைத்தானே செய்தாய், அன்று நீ இல்லையென்றால், தேவன் இன்னுமொருவரை அனுப்பியிருப்பார்" என்று பலர் முன்னிலையிலே தனக்கு உதவி செய்த மனிதனானவனை கடிந்து கொண்டான். பிரியமான சகோதர சகோதரிகளே, அந்த விசுவாசியானவன், முதலாவதாக, தன் இருதயத்தை நல்ல பொக்கிஷத்தால் நிரப்பி வைக்க கற்றுக் கொள்ள வேண்டும். அப்போது, அவன் வாயிலிருந்து நன்மையான வார்த்தைகளே புறப்படும். அத்தோடு அவன் நன்றியறிதலுள்ளவனாகவும் இருப்பான். நாம் ஒரு மனிதனிடம் நன்மையை பெற்றுக் கொள்வதால், எல்லாவற்றிலும் நாம் அவனுக்கு அடிமையாக இருக்க வேண்டும் என்பது கருப்பொருளல்ல. ஒருவனிடம் நன்மையை பெற்றுக் கொண்டதால், நாம் அவன் செய்யும் தீமைகளுக்கு இணங்க வேண்டிய அவசியமும் இல்லை. அவனுக்காக நாம் பொய் சொல்ல வேண்டியதும் இல்லை. ஆனால் எல்லா சூழ்நிலைகளிலும் நம்முடைய வாயின் வார்த்தைகள் கிருபை பொருந்தியதாக இருக்க வேண்டும். ஒருவன் நன்மை செய்ய அறிந்திருக்கும் போது, அவன் அதை செய்யாதிருந்தால், தேவன் வேறொரு வழியை வைத்திருப்பார் என்பது உண்மை, அதனால், ஒருவரிடம் நாம் நன்மையை பெற்ற பின்பு, அதை மறுபதலிப்பது நமக்கு தகுதியாக இருக்காது. ஒருவேளை, நன்மை செய்தவன், கைமாறு கருதி, தான் செய்த நன்மையை குறித்து தாரை ஊதுவிக்கலாம். அதாவது, இத்தனையாம் ஆண்டு, இவருக்கு நான் இன்னது செய்தேன். அவனுக்கு நான் அப்படி செய்தேன் என்று பலர் முன்னிலையில் தான் மற்றவர்களுக்கு செய்த நன்மைகளைக் குறித்து பேசிக் கொள்ளலாம். அப்படி செய்கின்றவன் தனது பலனை அடைந்து தீர்ந்ததென்று மெய்யாகவே நான் உங்களுக்கு சொல்லுகின்றேன் என்று ஆண்டவராகிய இயேசு கூறியிருக்கின்றார். எனவே, உங்கள் கைமாறு பரலோகத்தில் பெரிதாக இருக்கும்படி நீங்கள் பெற்றுக் கொண்ட நன்மைகளுக்காக, மனிதர்களுக்கும், தேவனுக்கும் மனதார நன்றியறிதலுள்ளவர்களாக இருங்கள். எந்த சூழ்நிலையிலும் தேவ சமாதானத்தை இழந்துவிடாதபடிக்கு, கிறிஸ்துவின் வசனம் உங்கள் மனதிலே நிலையாய் தரித்திருப்பதாக.

**ஜெபம்:** என்னை உமக்கென்று தெரிந்த கொண்ட தேவனே, நீர் எனக்கு அனுப்பி வைத்த நன்மைகளை நான் ஒரு போதும் மறந்து போகாமல், மனிதர்களுக்கும், உமக்கும் நன்றியுள்ளவனாக இருக்க கிருபை செய்வீராக. இரட்ச கர் இயேசு வழி யாக ஜெபிக்கிறேன் ஆமென்.

 📖 மாலை வாசகம் – யாக்கோபு 1:17

# நன்மைக்கு பதிலாக தீமையா?

"அவர்கள் என்னிடமிருந்து அநேக நன்மைகளை பெற்றவர்கள். தற்போது, தங்கள் குறைகளை மறைக்க, எனக்கு தீமை செய்கிறார்கள். நான் என்ன செய்வேன்" என்று ஒரு விசுவாசியானவன் தன் மேய்ப்பரானவரிடத்தில் தன் நோவுகளை மனவேதனையுடனும், கசப்புடனும் கூறிக் கொண்டான். பிரியமானவர்களே, இப்படியாக சூழ்நிலைக்கு நீங்கள் தள்ளப்பட்டிருக்கின்றீர்களா? நீங்கள் அறிந்தோ அறியாமலோ, நன்மைக்கு பதிலாக தீமை செய்திருக்கலாம் அல்லது நன்மை செய்து தீமையை கைமாறாக பெற்றிருக்கலாம். நீங்கள் எந்த தரப்பினராக இருந்தாலும், நீங்கள் செய்யப்போகும் காரியத்தைக் குறித்து எச்சரிக்கையுள்ளவர்களாக இருங்கள். முதலாவதாக, அறிந்தோ அறியாமலோ, நன்மைக்கு தீமை செய் கின்றவர்கள், காலதாமதமின்றி, தங்களை தேவனிடத்தில் ஒப்புக் கொடுத்து, மனந்திரும்பி, தீமை செய்தவர்களிடம் மன்னிப்பை பெற்றுக் கொள்ள வேண்டும். அது அவ ர்கள் ஆத்துமாவிற்கு நல்லது. இது கடினமான காரியம் அல்ல. அப்படி செய்யாதிருந்தால் என்ன சம்பவிக்கும்? நன்மைக்குத் தீமை செய்கிறவன் எவனோ, அவன் வீட்டைவிட்டுத் தீமை நீங்காது. (நீதி 17:13) என்று பரிசுத்த தேவதாகமம் எச்சரிப்பை வழங்குகின்றது. இரண்டாவதாக, நன்மை செய்து தீமையை கைமாறாக பெற்றவர்கள், பதிலடியாக தீமை செய்யாதபடிக்கும், தாங்கள் செய்த நன்மையின் பலனை இழந்துவிடாதபடிக்கும் தங்கள் வாழ்க்கையை காத்துக் கொள்ளவேண்டும். கிறிஸ்து உங்கள் இருதயத்திலே வாசம் செய்தால், அங்கே நன்மை உண்டாயிருக்கும். எக்காலத்திலும், எல்லா சூழ்நிலைகளிலும், அங்கிருந்து நற்கனிகளே வெளிப்படும். எனவே, தீமைக்கு பதிலடி கொடுப்பதை முற்றாக மறந்து விடுங்கள். கைமாறு கருதி நன்மை செய்யாமல், கர்த்தருக்கு சித்தமானால், நன்மை செய்து பாடுகளை அனுபவிப்பதே நமக்கு நலமானது. நன்மைக்கு பதிலாக தீமை செய்கின்றவன், ஏற்கனவே, தீமையை தன் வீட்டிற்குள் வரவழைத்திருக்கி ன்றான். தீமை அவன் வீட்டில் தங்கியிருக்கும். அவன் தீமையிலே அழிந்து போகாதபடிக்கு, அவனை சபிக்காமல், அவன் மனக்கண்கள் பிரகாசிப்பிக்கப்பட வேண்டும் என்று அவனுக்காக ஜெபம் செய்யுங்கள். பொல்லாங்கனாகிய பிசாசானவன் தீமைக்கு தகப்பனாயிருக்கின்றான். எனவே, தீமைஉங்களை மேற்கொள்ளாதபடிக்கு, ஒருவனுக்கும் தீமைக்குத் தீமை செய்யாதிருங்கள்.

**ரோமர் 12:21**

**நீ தீமையினாலே வெல்லப்படாமல், தீமையை நன்மையினாலே வெல்லு.**

**ஜெபம்**: எப்போதும் நன்மை செய்கின்ற தேவனே, நான் உம்முடைய சாயலிலே வளர்ந்து பெருகும்படிக்கு, நல்லோருக்கும், தீயோருக்கும் எப்போதும் நன்மை செய்யும்படிக்கு எனக்கு பெலன் தந்தருள்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# தானாய் கனி கொடுக்க முடியாது

ஒரு பண்ணையின் சொந்தக்காரனானவன், பண்ணையின் பின்புறத்திலே, ஒரு உயர் ரக பலா மரத்தை கன்றொன்றை நட்டு, பண்ணிலுள்ள ஆடு மாடுகள், அந்த கன்றை மேய்ந்துவிடாதபடிக்கு, பாதுகாப்பின் வேலியைப் போட்டு, நீர் பாய்ச்சி, காலத்திற்திற்கு ஏற்றபடி, அதற்கு பசளை போட்டு, அதை நன்றாக பராமரித்து வந்தான். அந்தக் கன்று மரமாக வளர்ந்து, மிகவும் சுவை யானகனிகளை கொடுத்தது. அந்த மரமானது, அது கொடுக்கும் நற்கனிகளை குறித்து மற்ற மரங்களோடு பெருமையாக பேசிக் கொண்டதாம். என்னைப் பார், என் வளர்ச்சியைப் பார், நான் கொடுக்கும் கனிகளின் சுவைத்த மனிதர்கள் சந்தோஷத்தைப் பார் என்று தன் சாதனைகளைக் குறித்து மேன்பாரட்டியது. பிரியமான சகோதர சகோதரிகளே, அந்த மரமானது சுவையான கனிகளை கொடுத்தது உண்மை. ஆனால் அது தானாக வளர்ந்து, தன்பாட்டிற்கே அப்படியான கனிகளை கொடுத்ததா? தோட்டத்து சொந்தக்காரன் அதை அல்லும் பகலும் பராமரித்து வந்தான் அல்லவோ? இன்று சில விசுவாசிகள் தாங்கள் செய்த நற்கிரியைகளைக் குறித்து மேன்மை பாராட்டிக் கொள்கின்றார்கள். செய்த நன்மைகளுக்கு கைமாறு எதிர்பார்க்காவிடினும், பலர் முன்னிலையில் தாங்கள் இன்னாருக்கு செய்த நன்மைகள் எத்தனையோ, அந்த நன்மைகளாலேதான் அவர்கள் இன்று இப்படி வாழ்கின்றார்கள் என்று தங்கள் கிரியைகளை, தங்கள் சாதனைகளாக பேசிக் கொள்கின்றார்கள். அவர்கள் அதற்குரிய பலனை அடைந்து தீர்ந்தாயிற்று. நாம் அப்படியிருக்கலாகாது. நாம் கர்த்தர் முன்னிலையில் நம்மைத் தாழ்த்தி, அப்பிரயோஜனமான பாத்திரங்களாகிய நம்மையும் ஒரு பொருட்டாக எண்ணி, கருவியாக பயன்படுத்தி வருகின்றதற்காக கர்த்தருக்கு மனதார நன்றி செலுத்த வேண்டும். “ஏனெனில், நற்கிரியைகளைச் செய்கிறதற்கு நாம் கிறிஸ்து இயேசுவுக்குள் சிருஷ்டிக்கப்பட்டு, தேவனுடைய செய்கையாயிருக்கிறோம் அவைகளில் நாம் நடக்கும்படி அவர் முன்னதாக அவைகளை ஆயத்தம்பண்ணியிருக்கிறார்.” ஒருவேளை நன்மையை பெற்றவர்கள், தங்கள் நன்றியைத் தெரிவிக்கும்படி நம்முடைய நற்கிரியைகளை குறித்து மேன்மையாக பேசிக் கொண்டாலும், நாம் தேவன் முன்னிலையில், எப்போதும் நம்மை தாழ்த்தி, தொடர்ந்தும் அவருடைய கரத்தின் கருவியாக காணப்பட வேண்டும்.

**யோவான் 15:4**

**நீங்களும் என்னில் நிலைத்திராவிட்டால், கனிகொடுக்கமாட்டீர்கள்.**

**ஜெபம்:** செய்கையையும் மன விருப்பத்தையும் என்னில் உண்டு பண்ணும் தேவனே, உம்மால் அன்றி நான் ஒன்றும் செய்ய முடியாது என்ற சத்தியத்தை உணர்ந்து, மனத்தாழ்மையோடு பணி செய்ய கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# தேவனுக்கு பிரியமான ஆராதனை

அக்காலத்திலே தேவனாகிய கர்த்தரால் தெரிந்து கொள்ளப்பட்ட ஜனங்கள்,எகிப்திலே அடிமைத்தனதுக்குள்ளாக்க பட்டிருந்தார்கள். தேவனுடைய முன்குறித்த காலம் வந்த போது,தேவனுடைய தாசனாகிய மோசே வழியாக தம்முடைய ஜனங்களை விடுதலையாக்க சித்தம் கொண்டார். மோசேயானவன், கர்த்தர் தனக்கு கற்பித்தபடியே, எகிப்தின் ராஜாவாகிய பார்வோனிடத்திற்கு சென்று தேவனாகிய கர்த்தருக்கு ஆரா தனை செய்ய தேவ ஜனங்களை அனுப்பி விடு என்று கூறினான். பார்வோன் மோசேயை நோக்கி: நீங்கள் போய், உங்கள் தேவனுக்கு எகிப்து தேசத்திலேயே பலியிடுங்கள் என்றான். பிரியமானவர்களே, பூமியும் அதன் நிறைவும் கர்த்தருடையது. அப்படியானால், பார்வோன் கூறியதைப் போல அவர்கள் அடிமைகளாக இருக்கும் எகிப்திலேயே ஆராதனை செய்தால் என்ன? மோசே பார்வோனை நோக்கி: அப்படிச் செய்யத்தகாது. எங்கள் தேவனாகிய கர்த்தருக்கு நாங்கள் இந்தத் தேசத்தின் அருவருப்பை பலியிடுகிறதாயிருக்குமே. நாங்கள் வனாந்தரத்தில் மூன்று நாள் பிரயா ணம்போய், எங்கள் தேவனாகிய கர்த்தர் எங்களுக்கு விதிக்கிறபடியே அவருக்குப் பலியிடுவோம் என்றான். ஆம், அருமையான சகோதர சகோதரிகளே, நம்முடைய விருப்பப்படியல்ல, மற்றவர்களை பிரியப் படுத்தும்படியல்ல, தேவனாகிய கர்த்தக்கு சுகந்த வாசனையான துதி ஆராதனையை நாம் ஏறெடுக்க வேண்டும். இந் நாட்களிலே, நாங்கள் ஆராதனை செய்கின்றோம் என்று, பலர் பலவிதமாக ஆராதனையை நடப்பிக்கின்றார்கள். அன்றைய நாட்கள் பழைய ஏற்பாட்டின் காலம், இது புதிய ஏற்பாட்டின் காலம் என்று கூறிக் கொள்கின்றார்கள். அது உண்மை. அப்படியானால், பழைய ஏற்பாட்டின் காலத்திலே அருவருப்பானவைகளை தேவனுக்கு பலியிட்டு ஆராதிக்க முடியாது. புதிய ஏற்பாட்டின் நாட்களிலே அருவருப்பானவைகளை செய்து ஆராதிக்க கூடுமோ? நாம் கிருபையினாலே பெற்றுக் கொண்ட சுதந்திரத்தை, நம்முடைய ஆசை இச்சைகளை நடப்பித்து, அதை நியாயப்படுத்துவதற்கு பயன்படுத்தலாகாது. தேவனை ஆராதிக்கின்றவர்கள் பயபக்தியோடு, “தேவன் ஆவியாயிருக்கிறார், அவரைத் தொழுதுகொள்ளுகிறவர்கள் ஆவியோடும் உண்மையோடும் அவரைத் தொழுதுகொள்ளவேண்டும்” எனவே நாம் பரிசுத்தத்தின் அலங்காரத்தோடு தேவனை ஆராதிப்போமாக.

**எபிரெயர் 12:14**

**பரிசுத்தமில்லாமல் ஒருவனும் கர்த்தரைத் தரிசிப்பதில்லையே.**

**ஜெபம்:** அந்தகார இருளிலிருந்து ஆச்சரியமான ஒளிக்கு என்னை வரவழைத்த தேவனே, சுயாதீனமுள்ளவனென்று நான் விரும்பிய பிரகாரமாக உம்மை ஆராதிக்காமல், பயபக்தியோடு ஆராதனை செய்ய வழிடநத்துவீராக. இரட்சகர்இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# நாம் நிற்க வேண்டிய இடம்

முன்னொரு காலத்திலே, ஒரு ஊரின் அயலில் சிறுவர்கள் தங்கள் வீட்டின் பாதையருகே பந்தடித்து விளையாடிக் கொண்டிருந்தார்கள். வீட்டிலிருந்கும் பெற்றோர், பெரியோர், அவர்களை மேற்பார்வை செய்து கொள்ளக்கூடிய தூரத்திலேயே அவர்கள் விளையாடிக் கொண்டிருந்தார்கள். இதைக் கண்ட, தெருவின் அப்புறத்திலுள்ள மனிதனொருவன், அவர்கள்பெற்றோரிடம்வந்து, அவர்களை நோக்கி: என்னுடைய வீட்டின் பின்புறத்திலே செப்பனிடப்பட்ட மைதானம் உண்டு. சிறுவர்கள் விட்டுவீதியாகவும், பாதுகாப்பாகவும் அங்கே விளையாடிக் கொள்ளலாம். நான் அவர்களை பார்த்துக் கொள்வேன் என்று கூறினான். அதற்கு பெற்றோர்கள், அந்த மனிதனானவனை நோக்கி: உங்கள் கரிசணைக்கு நன்றி, ஆனால், பிள்ளைகள் எங்கள் மேற்பார்வையின் கீழ் இருப்பதையே நாங்கள் விரும்புகின்றோம் என்று தயவாக கூறி அந்த மனிதனை அனுப்பி வைத்தார்கள். ஏனெனில், அந்த மனிதனானவன், சிறுவர்களை கவர்ந்து கொண்டு, தனக்கு ஆதாயம் உண்டாகும்படிக்கு, பின்னர் சிறுவர்களை தவறான பழக்கவழங்கங்களுக்கு நடத்துகின்றவன் என்பதை அறிந்திருந்தார்கள். நித்திய ஜீவனுக்கென்று வேறுபிரிக்கப்பட்ட தேவ பிள்ளைகளே, இந்த உலகம் தரும் கவர்சியும், நலமிக்கத்தைப்போல தோன்றும் காட்சிகளும், பெற்றோர் பெரியோருடைய பார்வைக்கு புறம்பே இருக்கும் செப்பனிடப்பட்ட மைதானம் போலிருக்கும். அங்கே சில விசுவாசிகள் கூறும் பாவமற்ற பொழுதுபோக்குகளை நிறைவேற்ற தகுந்த இடமாக தோன்றலாம். ஆனால், ஒரு விசுவாசியானவன் இந்த உலகத்திலே வாழ்வதன் பிரதானமான நோக்கம் தன்னுடைய பொழுதுபோக்குகளை நிறைவேற்றி முடிப்பதற்காக இல்லை என்பதை நன்றாக அறிந்திருக்க வேண்டும். மேலே கூறப்பட்டசம்பவத்திலே, அந்த மனிதனானவன், சிறுவர்களை ஏன் அழைத்தான்? அதுபோலவே, இந்த உலகமானது நம்மை அழைக்கின்றது. நித்திய ஜீவனை கொடுக்கும்படிக்கு அல்ல மாறாக, நித்திய மரணத்திற்கு நம்மை நடத்தவே அது அழைப்பு விடுகின்றது. எனவே, இந்த உலகம் தரும் கல்வி, உறவு, நட்பு, உல்லாசம் என்பவைகளைக் குறித்து எச்சரிக்கையுள்ளவர்ளாக இருங்கள். நீங்கள் எப்போது, உங்கள் மைதானத்தைவிட்டு வெளிலே புதிய மைதானத்திற்கு செல்கின்றீர்களோ, நீங்கள் புதிய மைதானத்தின் சட்டதிட்டங்களின்படியே நடக்க வேண்டும் என்பதை மறந்து விடாதிருங்கள்.

**1 யோவான் 5:19**

**நாம் தேவனால் உண்டாயிருக்கிறோமென்றும், உலகமுழுவதும் பொல்லாங்கனுக்குள் கிடக்கிறதென்றும் அறிந்திருக்கிறோம்.**

**ஜெபம்:** என்மீது அன்புகூர்ந்த தேவனே, நான் இந்த உலகத்தின் மாயைக்குள் சிக்கிவிழாதபடிக்கு, எப்போதும் உம்முடைய சத்தத்திற்கு செவிகொடுக்கின்றவனாக வாழ எனக்கு பிரகாசமுள்ள மனக்கண்களை தந்து வழிநடத்துவீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

செவ்வாய் | ஆகஸ்ட் 20

📖 மாலை வாசகம் - மத்தேயு 7:13 - 14

# உலகத்தினால் உண்டாகும் அழைப்புக்கள்

ஒரு ஊரின் இருந்த ஐசுவரியமுள்ள வியாபாரியொருவன், அந்த ஊரின் கடற்கரை அருகிலே, பல களியாட்டங்களும், விளையாட்டுக்களும் நிறைந்த, பெரிதான உல்லாசப் பூங்கா ஒன்றை கட்டினான். பல இடங்களிலிருந்து அந்தப் பூங்காவிற்கு ஜனங்கள் திரண்டு வந்தார்கள். ஆனாலும், வார இறுதிநாட்களிலே, ஊரிலே வாழும் மக்களில் அதிக படியானோர், காலை ஆலயத்திற்கு செல்லவேண்டியிருந்ததால், அந்த பூங்காவின் இலாபமானது, அந்த வியாபாரியானவன் எதிர்பார்த்ததைவிட மிகக் குறைவாகவே இருந்தது. இந்த குறைவை ஈடு செய்வதற்கு என்ன செய்ய முடியும் என, அந்த வணிகத்தின் பிரமுகர்கள் கலந்தாலோசித்தார்கள். அங்கிருந்து பிரமுகர்களில் ஒருவன், அவர்களை நோக்கி: அந்த பூங்காவின் தங்கும் விடுதிகளுக்கு அருகிலே ஒரு ஆலயத்தை நிறுவுங்கள். வார இறுதிநாட்களிலே, காலையிலே நேரத்தோடு, அங்கே ஆராதனைகளை வைக்க ஒழுங்கு செய்யுங்கள். அப்போது, ஜனங்கள் வந்து, ஆலயத்திற்கு சென்று, பின்னர் பூங்காவிற்கு வருவார்கள் என்று கூறினார். அந்த ஆலோசனை, வியாபாரிக்கு மிகவும் ஏற்புடையதாக இருந்ததால், உடடினயாக அந்த திட்டத்தை அமுல்படுத்த ஏற்பாடு செய்தான். எப்படி அதை செய்தான்? நாங்கள் உல்லாசத்துறையில் மட்டுமல்ல, ஊர் ஜனங்களின் சேமநலத்தையும் கருதி, ஒரு ஆலயம் நிறுவுவதற்காக பெருந்தொகையான பணத்தை முதலீடு செயகின்றோம் என்று விளம்பரப்படுத்தினான். அந்த ஊரில் வாழ்ந்து கணிசமான ஜனங்களுக்கு அந்த திட்டம், மிகவும் வரவேற்புக்குரியதாக இருந்தது. சிறுவர்கள், வாலிபர்கள், காலை ஒரு மணிநேர ஆராதனைக்கு பின்னர், அந்நாளை மிகவும் களிப்புடன் கழித்தார்கள். அந்தப் போக்கிலேயே செல்ல ஆரம்பித்தார்கள். பிரியமானவர்களே, இந்த உலகமும், உலகத்திற்குரியவைகளும் போகின்ற போக்கை நீங்கள் நன்கு அறிந்திருக்கின்றீர்கள். அவர்களுடைய இலக்கு என்ன என்பதையும், உங்களுடைய இலக்கு என்ன என்பதையும் மறந்து போய் விடாதிருங்கள். உங்கள் விசுவாச வாழ்க்கைக்கு ஆதரவாக இருக்கின்றோம் என்று உலகம் உங்களை அழைக்கும் போது, மதியற்றவர்களைப்போல அதற்கு உடன்படாதிருங்கள். வாழ்வு உண்டு என்று உலகம் கூறும் போது, அது வஞ்சமான அழைப்பு என்பதை வேதம் தெளிவாக எடுத்துக் காட்டுகின்றது. நீதிக்கும் அநீதிக்கும் சம்பந்தம் ஏது? ஒளிக்கும் இருளுக்கும் ஐக்கியம் ஏது?

**ரோமர் 12:2**

**நீங்கள் இந்தப் பிரபஞ்சத்திற்கு ஒத்த வேஷந்தரியாமல்**

**ஜெபம்**: என் மனம் புதிதாகிறதினாலே மறுரூபமாகும்படி அழைத்த தேவனே, இந்த உலகத்தின் நன்மையாக தோன்றும் வஞ்சகமான திட்டங்களுக்கு நான் உடன்படாதிருக்க எனக்கு உணர்வுள்ள இருதயத்தை தந்தருள்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

புதன் | ஆகஸ்ட் 21 | 📖 மாலை வாசகம் – சங்கீதம் 139:23–24

# என் வாழ்வில் நிலைமை என்ன?

இன்று மனிதர்கள் பொதுவாக தங்களுடைய நிதி நிர்வாக நிலைமைகளை ஆராய்ந்து அறிவதுண்டு. அப்படியாக தாங்கள் முறைப்படி நிதி நிலைமைகளை ஆராய்ந்து அறிவதில்லை என்று கூறும் மனிதர்கள், தங்கள் கையிலே, கணக்கிலே, சொத்திலே எவ்வளவு பணம் இருக்கின்றதென்பதை அன்றாடம் நன்றாகவே அறிந்திருப்பார்கள். கையிலே, கணக்கிலே, சொத்திலே இருப்பவை அநித்தியமானவைகளாக இருக்கின்ற போதிலும், தங்களிடம் இருப்பவைகளை கணக்குப்பார்த்து, ஆராய்ந்து அறிவது நல்லது. அதுபோலவே நாம் நம்முடைய ஆன்மீக வாழ்வை அவ்வப்போது ஆராய்து அதைவிட மேலானதும், முக்கிமானதுமாக இருக்கின்றது. ஞாயிறுதோறும் ஆலயத்திற்கு செல்கின்றவர்கள், தேவ செய்தியை கேட்கின்றார்கள். அந்த செய்தியானது தங்கள் தனிப்பட்ட வாழ்க்கையை குறித்ததாக இருந்தால், அதை நல்மனதோடு ஏற்றுக் கொள்கின்றவர்கள் எத்தனை பேர்? ஒருவேளை உபதேசம் செய்கின்றவர்கள் அறிந்தோ அறியாமலோ, உங்கள் குடும்பத்திலே, வாழ்விலே இருக்கும் குறைகளை சுட்டிக் காட்டி கடிந்து கொள்ளும் போது, அந்த கடிந்து கொள்ளுதலை உங்களால் ஏற்றுக் கொள்ள முடிகின்றதா? சற்று ஆராய்ந்து பாருங்கள். இன்று விசுவாச மார்க்கத்தாரில் பலர், முறைமைகளில் அதிக கவனத்தை செலுத்துகின்றார்கள். போதகர் இப்படி சொல்லாமல், என்னை அழைத்து தனியாக பேசியிருக்கலாம் என்று கூறுவார்கள். தனியாக பேசினால், சபையில் பலர் ஏதோ பிரச்சனையென்று அறிந்து கொள்வார்கள், அதனால் அது வெட்கமாகி விடுமே என்பார்கள். கருப்பொருளாவது, இன்றைய நாட்களிலே பலர், உபதேசத்தின் கருப்பொருளை நோக்கிப் பார்க்காமல், போதர்கள், மூப்பர்கள் எப்படி உபதேசிக்க வேண்டும் என்னும் முறைமைகளிலே அதிக கவனம் செலுத்துவதால், உபதேசத்தை கேட்பதற்கு பதிலாக, தாங்களே உபதேசம் செய்கின்றவர்களுக்கு உபதேசிக்கின்றவர்களாக மாறிவிடுகின்றார்கள். இதனால் தங்கள் வாழ்வில் குறைகளை அறிந்து கொள்ளாமல் உணர்வற்றுப் போய்விடுகின்றார்கள். பிரியமானவர்களே, உங்கள் வாழ்வின் காலம் கடந்து செல்வதற்கு முன்னதாக, வேத வார்த்தையின் வெளிச்சத்திலே ஆராய்ந்து பார்த்து, வேதனை உண்டாக்கும் வழிகளைவிட்டு விலக கற்றுக் கொள்ளுங்கள். சத்திய ஆவியாவனர்தாமே உங்களுக்கு துணை நின்று உதவி செய்வார்.

**புலம்பல் 3:39**

**நாம் நம்முடைய வழிகளைச் சோதித்து ஆராய்ந்து, கர்த்தரிடத்தில் திரும்பக்கடவோம்**

**ஜெபம்:** நித்திய வாழ்வுக்கென்று என்னை அழைத்த தேவனே, நான் என் பாவத்துக்கு வரும் தண்டனையைக்குறித்து முறையிடாமல், என்னை ஆராய்ந்து உம்மிடம் திரும்ப உணர்வுள்ள இருதயத்தை தந்தருள்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# நீங்கள் ஆவலுடன் நடப்பிப்பவைகள்

திவ்விய சாயலிலே வளர்ந்து பெருகும்படிக்கு அழைப்பட்ட என் வாழ்வு சரியான பாதையிலே போகின்றதா என்று எப்படி அறிந்து கொள்வது? நாம் நம் நிலைமையை ஆராய்ந்து அறிந்து கொள்ளக் கூடிய சில வழிகளை இன்று ஆராய்ந்து பார்ப்போம். நாளாந்த வாழ்க்கையிலே நாம் செய்ய வேண்டிய கடமைகள் உண்டு. எடுத்துக்காட்டாகவே, கல்வி, வேலை, குடும்பத்தை கவனிப்பது என்று பல காரியங்களை விரும்பியோ விரும்பாமலோ தினமும் நாம் செய்து வருகின்றோம். ஏனெனில் சில கடமைகளை நாம் தவிர்த்துக் கொள்ள முடியாது. அதைவிட நாம் இரவிலே இளைபாற வேண்டிய நேரம் உண்டு. அவைகள் போக, மிகுதியான நேரங்களிலே நீங்கள் மனதாரவிரும்பி செய்யும் பொழுது போக்குகள் என்ன? அவற்றுள் ஐந்து காரியங்களை பட்டியல்படுத்திக் கொள்ளுங்கள். என்னதான் நடத்தாலும், நான் எப்படியும் செய்து முடிப்பேன் என்று ஆவலோடு நடப்பிக்கும் முதல் மூன்று காரியங்களை தெரிந்து கொள்ளுங்கள். எடுத்துக்காட்டாக, நண்பர்களோடு பேசிக்கொள்வது, ஊடகங்களிலே வரும் சுவாரசியமான காரியங்களை பார்ப்பது, குறித்த நாளிலே நடக்கவிருக்கும் விளையாட்டுப்போட்டிகளை தொலைக்காட்சியில் பார்ப்பது போன்ற உங்கள் மனதில் சலித்துப் போகாத விருப்பங்களை பட்டியல் படுத்துங்கள். அவற்றுள் வேத வாசிப்பும், ஜெபமும் எங்கே இருக்கின்றது என்று உண்மையாய் ஆராய்ந்து பாருங்கள். சிலர் அது முதலிடம் என்று காலையிலே எழுந்தவுடன் அதை செய்து விடுவோம் என்று கூறிக் கொள்வார்கள். நல்லது, அப்படியானால் காலையிலே எழுந்து அவற்றை கடமையாக செய்கின்றீர்களா? அல்லது மன வாஞ்சையோடு செய்கின்றீர்களா? இரவு விருந்திக்கு ஒருவருடைய வீட்டிற்கு செல்லும் போது, நான் நேரத்தோடு சென்று உறங்கி காலையிலே எழுந்து என் ஆத்தும நேசரோடு நேரத்தை செலவிட வேண்டும் என்கின்ற வாஞ்சை உண்டா? அப்படி இல்லையென்றால், பரலோகத்திலிருந்து நன்மையானவற்றை நமக்கு தருகின்ற பரம பிதாவினிடத்தில் கேளுங்கள். துணையாளராகிய தூய ஆவியானவரின் துணையை நாடுங்கள். அவர் உங்களுடைய வாழ்க்கையில் தேவனுக்கு பிரியமானரவைகளை வாஞ்சையோடு நடப்பிக்க உங்களுக்கு உதவி செய்வார்.

**சங்கீதம் 143:10**

**உமக்குப் பிரியமானதைச் செய்ய எனக்குப் போதித்தருளும் நீரே என் தேவன்; உம்முடைய நல்ல ஆவி என்னைச் செம்மையான வழியிலே நடத்துவாராக**

**ஜெபம்**: உம்முடைய திருக்குமாரனாகிய இயேசுவின் சாயலில் வளர என்னை வேறு பிரித்த தேவனே, நீரே என் ஆத்தும நேசர் என்று நான் மனதார கூறும்படிக்கு, உம்மைக் குறித்த வாஞ்சை என் வாழ்விலே பெருவதாக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# பாதகமற்றவைகளாக தோன்றுபவைகள்

தூர தேசமொன்றிற்கு சுற்றுலா சென்ற வாலிபனாவன் சென்ற பஸ் வண்டியானது, எதிர்பாராத விபத்தொன்றில் அகப்பட்டதால், தன் சொந்த ஊருக்கு திரும்ப முடியாதபடிக்கு தனியே விடப்பட்டிருந்தான். அவனுடைய தகப்பனானவர், ஐசுவரியமுள்ளவராக இருந்ததால், கடல் வழியாக வீடு திரும்பும்படிக்கு, அவனுக்கு ஒரு கப்பலை ஆயத்தப்படுத்தி, அவனுடைய கடல் யாத்திரைக்கு வேண்டிய யாவற்றையும் செய்து கொடுத்தார். தன் சொந்த ஊரருக்கு திரும்பப் போகின்றேன் என் பரவசத்துடன் கடல் யாத்திரையை ஆரம்பித்தான். சில நாட்கள் சென்றதும் எங்கும் கடல் மயமாகவே இருந்ததால், பொழுதைக் கழிக்க, ஏதாவது புதிதாக செய்ய வேண்டும் என்ற எண்ணம் அவனுக்கு உண்டாயிற்று. தன் கப்பலின் பருமனை, கடலிலே சென்று கொண்டிருக்கும் மற்றய கப்பலுடன் ஒப்பிட்டுப் பார்த்தான். பின்னர், எப்படி மிகவும் பராமான இந்தக் கப்பல் மிதக்கி ன்றது என்பதைக் குறித்து ஆராய ஆரப்பித்தான். இவற்றிலே அதிக நேரங்களை செலவு செய்து வந்ததால், தன்னுடைய இலக்கை குறித்த எண்ணம் அவன் மனதிலே தணிய ஆரம்பித்தது. கப்பலை பராமரிக்கும் காரியங்களை தவறவிட்டான். சிறிதாக ஆரம்பித்த பொழுதுபோக்கு, அவனுக்கு புத்தியை தெளிவிக்கின்றதாக இருந்தது. அதனால் அவன் அவற்றை குறித்து மிகவும் ஆர்வம் கொண்டான். அவன் கடற் யாத்திரைக்காக அனுதினமும் தான் செய்ய வேண்டிய கடமைகள் பொறுப்புகளை மறந்து போனான். பிரியமான சகோதர சகோதரிகளே, பரம யாத்திரிகளாக இந்த உலகத்தை கடந்து கொண்டிருக்கும் உங்களுக்கு இந்த யாத்திரைக்கு வேண்டிய யாவற்றையும் தேவனாகிய கர்த்தர் கொடுத்திருக்கின்றார். நாட்கள் கடந்து செல்லும் போது, சலிப்படைந்து போய்விடாதபடிக்கு, இலக்கின் மேல் கண்களை பதிய வைத்துக் கொள்ளுங்கள். அதன்படிக்கு, அனுதினமும், வேதவார்த்தைகளால் நீங்கள் செய்ய வேண்டியவைகளை ஞாபகப்படுத்திக் கொள்ளுங்கள். பொழுபோக்குகள் உங்களுக்கு பாதகமற்றதாக தோன்றலாம். அவை சிறிதாக ஆரம்பித்து, பின்னர் உங்கள் உள்ளத்தை ஆளுகை செய்யாதபடிக்கு எச்சரிக்கையுள்ளவர்களாக இருங்கள். கிறிஸ்து இயேசுவினால் நீங்கள் எதற்காகப் பிடிக்கப்பட்டீர்களோ அதை பிடித்துக்கொள்ளும்படி ஆசையாய்த்தொடர்ந்து முன்னேறுங்கள். இலக்கை அடைவதற்றானவைகளை செய்வதற்கு மறந்து போய்விடாதிருங்கள்.

**பிலிப்பியர் 3:12**

**கிறிஸ்து இயேசுவினால் நான் எதற்காகப் பிடிக்கப்பட்டேனோ அதை நான் பிடித்துக்கொள்ளும்படி ஆசையாய்த் தொடருகிறேன்.**

**ஜெபம்:** பரம அழைப்பின் பந்தையப் பொருளுக்காக என்னை அழைத்த தேவனே, தாபரிக்கும் ஊர் எது என்பதை நான் பாதி வழியில் மறந்து மதியீனனாக மாறாதபடிக்கு எனக்கு கிருபை செய்வீராக. இரட்சகர்இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# அறியாத ஆழங்கள்

சமுத்திரத்தில், கப்பல் வழியாக தான் தாபரிக்கும் ஊருக்கு சென்று கொண்டிருந்த வாலிபனுக்கு, தீரென்ற ஒரு எண்ணம் உண்டாயிற்று. இந்தப் பாரிய கப்பல், சமுத்திரத்தில் மிதக்கின்றதே, இந்த சமுத்திரத் தில் ஆழம் என்ன என்று அறியும்படி விரும்பினான். அதன்பொருட்டு, பல யுத்திகளை செய்து, சமுத்திரத்தின் ஆழத்திலே செல்ல ஆரம்பித் தான். அநேக அதிசயமான காரி யங்ளை கண்டு பிடித்தான். ஆனால், அவைகளைவிட அவன் பிரயாணத்திற்கு அத்தி யவசியமான காரியங்கள் பல இருந்தன. அதிசயமான காரிய ங்களால் பரவசமடைந்தவன், அத்தியவசியமானவைகளை மறந்து போய்விட்டான். ஒரு நாள், அவன் சமுத்திரத்தின் ஆழ த்திற்குள்ளே சென்ற போது, கடலிலே வாழும் சில ஜந்துக் களால் தாக்கப்பட்டு, மிகவும் காயப்பட்டு, படுகாயங்களுடன் மயிரி ழையில் உயிர் தப்பினான். ஆம் பிரியமான சகோதர சகோதரிகளே, இன்று விசுவாசிகளில் பலர், வேதத்தின் ஆழத்தை அறிய வேண்டும் என்று அறியாத ஆழங்களுக்குள்ளே செல்கின்றார்கள். ஆனால், தங் கள் வாழ்க்கையிலே, மனமாற்றத்திற்காக தற்போது செய்யப்பட வேண் டிய அடிப்படைக் காரியங்களை மறந்து போய்விடுகின்றார்கள். எடுத்து க்ககாட்டாக, ஒரு விசுவாசியின் உள்ளத்திலே இன்னுமொரு விசு வாசியை மன்னிக்க முடியாதபடிக்கு, அநேக நாட்களாக மனதிலே கச ப்பு உண்டாயிருக்கும் வேளையிலே, மோசேயானவன், கடந்து சென்ற வனாந்திரத்திலே எத்தகைய காலநிலை இருந்தது, எப்படிப்பட்ட வன விலங்குகள் இருந்து என்று ஆராய்ந்து பார்க்கும்படி பாடங்களை கற் கின்றார்கள். மனதிலே கசப்பு உண்டானால் என்ன செய்ய வேண்டும் என்று யாவரும் புரிந்து கொள்ளும்படிக்கு ஆண்டவராகிய இயேசு தெளிவாக காரியங்களை கூறியிருக்கின்றார். ஆனால், உள்ளான மனித னுக்குரியவைகளை மறந்து விட்டு, தங்கள் குற்ற உணர்வுகளை மறை க்கும்படிக்கு, ஆழமானவைகளை கற்றுக் கொள்ள வேண்டும் என்று தங்கள் நாட்களை விரயப்படுத்ததுக்கின்றார்கள். வேறு சிலர் அறியாத ஆழங்களுக்குள்ளே நுழைந்து, விவாதங்களையும், குழப்பங்களையும் ஏற்படுத்தி, தங்கள் அழைப்பையும் தெரிந்து கொள்ளுதலையும் குறித்த கருப்பொருயை மறந்து போய்விடுகின்றார்கள்.

**மத்தேயு 7:24**

**ஆகையால், நான் சொல்லிய இந்த வார்த்தைகளைக் கேட்டு, இவைகளின்படி செய்கிறவன் எவனோ, அவனைக் கன்மலை யின்மேல் தன் வீட்டைக் கட் டின புத்தியுள்ள மனுஷனுக்கு ஒப்பிடுவேன்.**

**ஜெபம்**: நித்திய ராஜ்யத்திற்கென்று அழைத்த தேவனே, நான் என் அழைப்பையும், தெரிந்து கொள்ளுதலையும் உறுதியாக்கும்படி எனக்கு உணர்வள்ள இருதயத்தை தந்து வழிநடத்திச் செல்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

📖 மாலை வாசகம் – பிரசங்கி 12:12 –13

# வேதத்திலுள்ள அதிசயங்கள்

நீங்கள் மிக முக்கியமான விஷயத்திற்காக, ஒரு குறிப்பிட்ட இடத்திற்கு பயணம் செய்து கொண்டிருக்கின்றீர்கள். குறித்த நேரத்திலே நீங்கள் அந்த இலக்கை அடைய வேண்டும். போகும் வழியிலே அநேக விஷயங்களை நீங்கள் கற்றுக் கொள்ளலாம். ஆனால், அவ்விஷயங்கள் நீங்கள் செய்யும் பயணத்திற்கு ஆதரவாக இல்லாமல், தடைகளையும் குழப்பங்களையும் ஏற்படுத்தும் என்றால், அந்த விஷயங்கள் எவ்வளவு நன்மையை தருகின்றதாக தோன்றினாலும் அதனால் இலாபம் என்ன? "வழியே போகையில் தனக்கடாத வழக்கில் தலையிடுகிறவன் நாயைக் காதைப் பிடித்திழுக்கிறவனைப்போலிருக்கிறான்." (நீதிமொழிகள் 26:17). இன்று வேதத்தின் இரகசியங்களை அறிந்து கொள்ள வேண்டும் என்று சிலர் அதிகதிகமாக பிரயாசப்படுகின்றார்கள். இந்த வெளிப்பாடுகள், மனித அறிவினாலோ, உலகத்தினால் உண்டாயிருக்கும் கலாசாலைகளினாலே உண்டாகமல், தேவ ஆவியினாலே உண்டாக வேண்டும். அதிக படிப்பு உடலுக்கு இளைப்பை உண்டுபண்ணும். ஆனால், தேவனை அறிகின்ற அறிவின் வளர்ச்சி ஆத்துமாவை உயிர்பிக்கும். எனவே. வேதத்தின் அதிசயங்களை நான் அறிவும் படிக்கு, தேவ ஆவியானவர் நம்முடைய மனக் கண்களை திறக்க வேண்டும். அந்த பிரகாசமுள்ள மனக்கண்களாலே, நாம் தேவனை அறிகின்ற அறிவு இன்னதென்பதை உணர்ந்து கொள்ள முடியம். அந்த அறிவிலே உள்ளான மனிதனானது நாளுக்கு நாள் புதிதாக்கப்படும். பாடநுபவித்தாலும், பிதாவின் சித்தத்தை நிறைவேற்ற வேண்டும் என்கின்ற கிறிஸ்துவின் சிந்தையானது அவர்களின் உருவாகும், அதனால் அவர்கள் தங்கள் வாழ்யின் அனுபவங்கள் வழியாக மறுரூபமாக்கப்படுகின்றதை மற்றவர்கள் கண்டு, பிதாவாகிய தேவனை மகிமைப் படுத்துவார்கள். வேறு சிலரோ, வேதத்தின் இரகசியங்களை அறிய வேண்டும் என்று, தங்களுக்கென்று தலைவர்களை தெரிந்து கொண்டு, ஆண்டவர் இயேசுவை பின்பற்றாமல், தாங்கள் விரும்பும் தலைவர்களை பின்பற்றுவதால், பாதி வழியிலே தங்கள் இலக்கை மறந்து போய்விடுகின்றார்கள். தாங்கள் தாபரிக்கும் ஊர் பரம தேசம் என்பதை குறித்து உணர்வற்றுப் போவதினாலே, ஊருக்குப் போகும் வழியை அறியாத மூடனைப் போல, அவர்கள் வழியிலே கொடுக்கும் தொல்லை ஒவ்வொருவரையும் இளைக்கப்பண்ணும். நீங்களோ ஞானமுள்ள பிள்ளைகளைப் போல முன்னோக்கி செல்லுங்கள்.

**சங்கீதம் 119:18**

**உமது வேதத்திலுள்ள அதிசயங்களை நான் பார்க்கும்படிக்கு, என் கண்களைத் திறந்தருளும்.**

**ஜெபம்:** சத்திய ஆவியானவரை எனக்கு தந்த தேவனே, நான் பாதி வழியிலே இறுமாப்படைந்து உணர்வற்றுப் போகாமல், உம்முடைய திருக்குமாரனின் சாயலிலே வளர்ந்து பெருக கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# நம்பிக்கையிலே உறுதியாயிருங்கள்

பாடசாலைக்கு செல்லும் மாணவனானவன், கல்வி திணைக்களத்தினால் அங்கீகாரம் பெற்ற, கணித பாடத்திட்டத்திட்டதைக் கொண்ட புத்தக மொன்றை கொள்வனவு செய்தான். அந்த புத்தகத்தின் ஆக்கியோன் (Author) கொடுத்திருக்கும் ஆரம்பம் அவனுக்கு முற்றாக விளங்கிக் கொள்ள முடியாமல் இருந்தது. அதனால், அவன் அந்தப் புத்தம் பிழை என்று அற்பமாக எண் ணாடமல், அந்த ஆக்கியோனின் மேலுள்ள நம்பிக்கையினாலே, ஒவ்வொரு அத்தியாயமாக, படிப் படியாக, கற்று வந்தான். முத லாம் வகுப்பிலே அவனுக்கு மிக வும் கடினமாக தோன்றிய கணித சூத்திரங்கள், ஐந்தாம் வகுப்பிலே மிகவும் இலகுவாக இருந்தது. ஏனெனில், அவன் பாடங்களை படிப்படியாக படித்து, பயிற்சிகளை தின மும் செய்து, இனி வரவிருக்கும் மேல் வகுப்புகளை குறித்து சிந்தித்து குழப்பமமையாமல்,ஆக்கியோனின் வழிகாட்டுதலின்படி, தற்போது கற்க வேண்டியவைகளை கிரத்தையோடு கற்று வந்தான். பிரியமான தேவனுடைய பிள்ளைகளே, “வேதவாக்கியங்களெல்லாம் தேவ ஆவி யினால் அருளப்பட்டிருக்கிறது” நம்மை அழைத்த தேவனாகிய கர்த்தரே அதன் ஆக்கியோனாக இருக்கின்றார். அவர் கொடுத்த வேதத்தின் ஆழ த்தை குறித்து குழப்பமடையாமல், முதலாவதாக அவர் நம்மை வாக் களித்த தேசமாகிய பரம தேசத்திற்கு கொண்டு சென்று சேர்ப்பார் என்ற விசுவாசம் நம்மில் மிக உறுதியாய் இருக்க வேண்டும். நாம் நித்திய ஜீவன் அடைவதற்கு வேண்டிய யாவற்றையும் அவர் கொடுத்த வேதம் கூறுகின்றது. அவற்றுள் சில நம்முடைய தேவையின் படி சுருக்கமாக கூறப்பட்டுள்ளது. எடுத்துக்காட்டாக, “ஆதாம் நூற்று முப்பது வயதா னபோது, தன் சாயலாகத் தன் ரூபத்தின்படியே ஒரு குமாரனைப் பெற்று, அவனுக்குச் சேத் என்று பேரிட்டான். ஆதாம் சேத்தைப் பெற் றபின், எண்ணூறு வருஷம் உயிரோடிருந்து, குமாரரையும் குமார த்திகளையும் பெற்றான்.” என்று தொளாயிரத்து முப்பது வருஷம் வாழ் ந்த ஆதாமின் நாட்களை குறித்து சுருக்கமாக கூறப்பட்டுள்ளது. அவன் வாழ்ந்த வருடங்களின் விளக்கம் நமக்கு அவசியம் என்றால், தேவ ஆவியானவர் அதை நமக்கு தெளிவாக கூறியிருப்பார். எனவே வேதப் புத்தகத்தின் ஆக்கியோனை நம்புங்கள். அவர் ஒருபோதும் நம்மை கைவிடமாட்டார். அவரே நமக்கு ஞானத்தை அருளுகின்றவர்.

**2 தீமோத்தேயு 3:16**

**ஜீவனுக்கும் தேவபக்திக்கும் வேண்டியயாவற்றையும், அவ ருடைய திவ்விய வல்லமை யானது நமக்குத் தந்தருளின துமன்றி,**

**ஜெபம்:** என்னை உருவாக்கி, எனக்கு உம்முடைய ஜீவ வார்த்தைகளை எழுதித்த தந்தவரே, நான் பொறுமையோடு உம்முடைய பாதத்திலிருந்து வேத வார்தைகளை கற்றுக் கொள்ள கிருபை செய்வீராக. இட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# விசுவாசம்

விசுவாசமில்லாமல் தேவனுக்கு பிரியமாயிருப்பது கூடாத காரியம், ஏனென்றால், தேவனிடத்தில் சேருகின்றவன் அவர் உண்டென்றும், அவர் தம்மை தேடுகின்றவர்களுக்கு பலன் அளிக்கின்றவரென்றும் விசு வாசிக்க வேண்டும் என்று பரிசுத்த வேதாகமத்திலே வாசிக்கின்றோம். விசுவாசமில்லாமல் ஒருவனும் தேவனை அறிய வேண்டிய பிரகாரமாக அறிய முடியாது என்பதையும், ஒரு வன் வேதத்தை கற்றுக் கொள்வத ற்கு, அதை ஈவாக நமக்கு கொடுத்த வரைக் குறித்த அசையாத விசுவா சம் அவனிடம் இல்லாவிடின், அவ னுடைய அறிவினால் உண்டாகும் பலன் அற்பமானதாகவே இருக்கும் என்று கடந்த நாட்களிலே தியானம் செய்தோம். நாம் விசுவாசத்தைக் கொண்டு இரட்சிக்கப்பட்டோம். அது நம்முடைய கிரியைகளினாலல்ல கிருபையினாலே உண்டாயிற்று. எனவே, நாம் நம்முடைய அழைப்பைக் காத்துக் கொள்வதற்கு வாழ் வின் எல்லா சூழ்நிலைகளிலும் விசுவாசத்திலே நிலைத்திருக்கிருக்கி ன்றவர்களாக இருக்க வேண்டும். கிறிஸ்துவுக்குள் வெற்றி வாழ்க்கை வாழ்வதற்கு விசுவாசம் இன்றியமையாததாக இருக்கின்றது. எனினும், ஆண்டவராகிய இயேசு தாம் திரும்பி வரும்போது விசுவாசத்தை காண் பேனோ என்று கூறியிருக்கின்றார். நாம் இரட்சிக்கப்பட்டிருக்கி ன்றோம் என்று கூறி, உணர்வற்றவர்களாக வாழ்ந்துவிட முடியாது. ஆண்டவர் இயேசுவின் மேலுள்ள நம்முடைய விசுவாசம் அற்றுப்போக வேண்டும் என்பதை அவர் விரும்பவில்லை, மாறாக நாம் அவர்மேல் கொண் டுள்ள விசுவாசமானது, இந்த உலகத்தினால் உண்டாகும் வஞ்சகத் தினால் தணிந்து போகாதபடிக்கு எச்சரிப்பை வழங்கியிருக்கின்றார். பரபரப்போடும், வாஞ்சையோடும் ஆரம்பிக்கும் வேறு பிரிக்கப்பட்ட வாழ்க்கையானது, நாட்கள் கடந்து செல்லும் போது, பல கோணங்க ளுக்கு திரும்பி விடுகின்றது. இதனால், ஆதியிலே விசுவாசத்திலே உறுதியாய் நின்றவர்களுடைய வாழ்க்கையிலே பல கேள்விகளும் சந்தேகங்களும், பயங்களும் எழுந்து விடுகின்றது. விசுவாசத்திலே ஆர ம்பித்த அவர்களுடைய வாழ்க்கையானது மறுபடியும் கிரியைகளுக்கும் மேன்மை பாராட்டுதலுக்கும் திரும்பி விடுகின்றது. பிரியமானவர்களே, விசுவாசிகள் என்று அழைக்கப்படுகின்ற நீங்கள், எவ்வித மான புயல்கள் உங்கள் வாழ்க்கைப் படகில் மோதினாலும் விசுவாச த்திலே உறுதியாய் நிலைத்திருங்கள்.

**1 யோவான் 5:5**

**இயேசுவானவர் தேவனுடைய குமாரனென்று விசுவாசிக்கிறவனேயன்றி உலகத்தை ஜெயிக்கிறவன் யார்?**

**ஜெபம்**: அன்பின் தேவனே, நான் பாரங்களையும், பாவங்களையும் தள்ளிவிட்டு, விசுவாசத்தை தொடக்கிறவரும் முடிகின்றவருமாகிய இயேசுவை நோக்கி எப்போதும் முன்னேறிச் செல்ல எனக்கு கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# ஆபத்தைக் கண்டு கலங்காதிருங்கள்

ஒரு தகப்பனானவர் தன் சின்ன மகனானவனுக்கு சைக்கிளை ஓட்டுவதற்கு பழக்கிக் கொடுத்துக் கொண்டிருந்தார். சில நாட்களுக்கு பின்பு, அவன் சைக்கிளை தெருவோரமாக ஓட்டிக் கொண்டு செல்லும் போது, அவனுடைய தகப்பனானவர் அவனை நோக்கி: நான் என் கையை உன் சைக்கிளிலிருந்து விட்டு எடுத்து, உன் பின்னே வருவேன், நீ நேராகப் பார்த்து சைக்கிளை ஓட்டிச் செல் என்று கூறினார். சில நாட்களுக்கு பின்பு, அவர் அவ்வண்ணமாகவே அவனை பயிற்சிவிக்கும் போது, அவன் தன் தலையைத் திருப்பி, வீதியின் அப்புறமாக வரும் சில மனிதர்களையும், வாகனங்களையும் திரும்பிப் பார்த்து கலங்கி, தன் கைகளை சைக்கிளை பிடியை விட்டு எடுத்து, சத்தம் போட ஆரம்பித்தான். அத னால் நிலை தவறிப்போனான். அவன் சைக்கிளோடு கீழே விழுவதற்கு முன் அவன் தகப்பனானவர் அவனை தாங்கிக் கொண்டார். பின்னர் அவனை நோக்கி: ஏன் உன் தலையை திருப்பி மறுபக்கமாக பார்த் தாய்? நான் உனக்கு பின்பாக வருவதை ஏன் மறந்து போனாய் என்று கேட்டார். ஆம், பிரியமானவர்களே, ஒரு சமயம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்தும் அவருடைய சீஷர்களும், படவில் ஏறி மறு கரைக்கு சென்று கொண்டிருந்தார்கள். படவு அலைகளினால் மூடப்படத்தக்கதாய்க் கடலில் பெருங்காற்று உண்டாயிற்று. அவரோ நித்திரையாயிருந்தார். அப்பொழுது, அவருடைய சீஷர்கள் வந்து, அவரை எழுப்பி: ஆண்டவரே! எங்களை இரட்சியும், மடிந்துபோகிறோம் என்றார்கள். அதற்கு அவர்: அற்பவிசுவாசிகளே! ஏன் பயப்படுகிறீர்கள் என்று சொல்லி எழுந்து, காற்றையும் கடலையும் அதட்டினார். உடனே, மிகுந்த அமைதலுண்டாயிற்று. இந்த உலகிலே நாம் வாழும்வரை, நம்முடைய வாழ்க்கையிலும் பெரும் புயல் போன்ற அனுபவங்கள் உண்டாகலாம். ஒரு வேளை அவை உங்களுக்கு ஒரு புதிய அனுபவமாக இருக்கலாம். அந்த வேளைகளிலே, நாம் சூழ்நிலைகளை நோக்கி பார்த்து, நம்மு டைய பெலத்திற்கு மிஞ்சினது என்று பதறிக் கலக்கமடையாமல், கர்த்தர்மேல் கொண்டுள்ள விசுவாசத்தில் உறுதியாய் நிலைத்திருக்க வேண்டும். அழைத்தவர் ஒருபோதும் நம்மைக் கைவிடமாடார். உலகத்தின் முடிவு பரியந்தமும் அவர் உங்களோடு இருப்பேன் என்று வாக்கு பண்ணியிருக்கின்றார். அந்த உறுதி எப்போதும் நம் இருதயத்தில் இருக்க வேண்டும். அதை நம் வாயினால் நாம் அறிக்கையிட வேண்டும்.

**யோவான் 14:1**

**உங்கள் இருதயம் கலங்காதிருப்பதாக; தேவனிடத்தில் விசுவாசமாயிருங்கள், என்னிடத்திலும் விசுவாசமாயிருங்கள்.**

**ஜெபம்:** ஒரு போதும் என்னை விட்டு விலகாத தேவனே, நான் எந்த சூழ்நிலையிலும் மனம் பதறி, பயம் என்னை ஆட்கொள்ளவிடாதபடிக்கு உம் வாக்குத்தத்தங்களில் நிலைத்திருக்க கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# சந்தேகத்தின் விதைகள்

சில வேளைகளிலே நாம் பயந்து கலங்கும் போது நம்முடைய விசுவாசமானது சோதனைக்குட்படுத்தப்படுகின்றது என்பதைக் குறித்து கடந்த நாளிலே தியானம் செய்தோம். அதனால் தான், நான் பயப்படும் நாளினிலே உம்மை நம்புவேன் என்று தேவ பக்தன் பாடியிருப்பதை பரிசுத்த வேதாகமத்திலே காண்கின்றோம். ஒரு வேலைக்காரன் தன் எஜமானனானவனுக்கு உண்மையும் உத்தமுமாய் நடந்து வந்தான். எஜமானனுடைய வார்த்தைகள் யாவும் வேலைக்காரனுடைய மனதிலே கனம்பொருந்தியதாய் இருந்து வந்தது. எஜமானனானவனும் அதை நன்கு அறிந்திருந்தான். தன் வேலைக்காரனின் விவகாரங்களிலே நீதியுடனும் நியாத்துடனும் நடந்து வந்தான். ஒருநாள், வேலைக்காரனின் குடும்பத்திலே ஒரு முக்கிய தேவை ஏற்பட்டிருந்தது. வழமைபோல, அவன் போய் தன் நிலைமையைக் குறித்து தன் எஜமானுக்கு தெரியப் படுத்தினான். எஜமானனானவன் வேலைக்காரனை நோக்கி: நீ உன் போய் உன் வேலைகளை செய். உன் குடும்பத்திலுள்ள தேவைகளை நான் பார்த்துக் கொள்வேன் என்று கூறினார். அவன் அப்புறமாய் போய், தன் வேலைகளை செய்ய ஆரம்பித்த போது, சக வேலைக்காரரில் ஒருவன், நீ இப்படி மூடத்தனமாக உன் எஜமானனை நம்புகின்றாயா? உன் குடும்பம் இருக்கும் நிலை நல்லதல்ல, அதை பராமுகமாக விட்டு விடாதே என்று கூறினான். அந்த வார்த்தைகளை உள்வாங்கிய அந்த வேலைக்காரனின் மனதிலே எஜமானானுடைய வார்த்தைகளைக் குறித்து சந்தேகம் எழ ஆரம்பித்தது. அவன் தன் எஜமானனில் வைத்திருந்த விசுவாசம் தளர ஆரம்பித்தது. ஆம் பிரியமான சகோதர சகோதரிகளே, இவ்வண்ணமாகவே, நம்முடைய மனதிலும் தேவனுடைய வார்த்தைகளை குறித்த சந்தேகங்கள் விதைக்கப்படும் போது, நம்முடைய ஆண்டவர் இயேசுவின் மேலுள்ள நம்முடைய விசுவாசமும் தளர்ந்து போய்விடுகின்றது. ஆதியிலே, ஏவாளானவள் தேவனுடைய கட்டளைக் குறித்து பிசாசாவனுடன் உரையாட தன் வாழ்விலே இடம் கொடுத்த போது, பிசாசானவன் அவள் மனதிலே சந்தேகங்களை விதைத்தான். அதனால் அவள் வஞ்சிக்கப்பட்டு போனாள். எனவே, எஜமானானாகிய இயேசுவின் வார்த்தைகளை குறித்த விமர்சனங்களுக்கு உங்கள் வாழ்க்கையில் இடமளிக்காமல் விசுவாசத்திலே நிலைத்திருங்கள்.

**1 கொரிந்தியர் 16:13**

**விழித்திருங்கள், விசுவாசத்திலே நிலைத்திருங்கள், புருஷராயிருங்கள், திடன்கொள்ளுங்கள்.**

**ஜெபம்:** நிலையான ராஜ்யத்திற்கு என்னை அழைத்த தேவனே, உம்முடைய வார்த்தைக்கு விரோதமான சம்பாஷனைகளுக்கு என் வாழ்வில் நான் இடங்கொடுக்காமல் உறுதியாய் நிலைநிற்க என்னை பெலப்படுத்துவீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# இருமனம் வேண்டாம்

நீங்கள் ஒன்றுக்கும் கவலையடையாமல் உங்கள் குறைகளை கர்த்தரிடத்தில் தெரியப்படுத்துங்கள் என்று பல ஆலோசனைகளையும், வாக்குத்தத்தங்களையும் நாம் வேதத்திலே காண்கின்றோம். ஆனாலும், விண்ணப்பம் செய்கின்றவன், எவ்வளவாகிலும் சந்தேகப்படாமல் விசுவாசத்தோடு விண்ணப்பம் செய்ய வேண்டும். சந்தேகப் படுகின்ற மனமானது, காற்றினால் அடிபட்டு அலைகிற கடலின் அலைக்கு ஒப்பாயிருக்கின்றது. எந்தக் காரியத்திலும் சந்தேகப் படுகின்றவன், தான் ஆரம்பத்தில் கொண்டிருந்த விசுவாசத்தைவிட்டு விலகி, விசுவாசத்திற்குரிய கிரியைகளை நடப்பிக்காமல், சந்தேகத்தினால் உண்டான மாற்று வழிகளை பின்பற்றுகின்றான். அப்படியானால், நாம் விசுவாசித்த பின்பு ஒன்றும் செய்யாமல் சும்மா இருப்பது சரியாகுமா? தேவனை விசுவாசிக்கின்றவன், தேவன் சொன்ன வார்த்தைகளின்படி தன் வாழ்வை அமைத்துக் கொள்கின்றான். ஒரு சமயம், சில குருடர்கள், தாங்கள் பார்வையடையும்படி ஆண்டவர் இயேசுவினிடத்தில் வந்தார்கள். அவர் அவர்களை நோக்கி: இதைச் செய்ய எனக்கு வல்லமை உண்டென்று விசுவாசிக்கின்றீர்களா என்று கேட்டார். அதற்கு, அவர்கள் ஆம் என்றார்கள். இயேசு அவர்கள் கண்களை தொட்டு குணமாக்கினார். வேறொரு சமயத்திலே, ஆண்டவர் இயேசு, தன்னை தேடி அதிக தூரம் வந்த நூற்றுக்கு அதிபதியை நோக்கி: நீ வீட்டிற்கு போ, உன் வேலைக்காரன் சுகமாவான் என்று கூறி அவனை அனுப்பி விட்டார். அவனும் இயேசு சொன்னதை செய்தான். அவனுடைய வேலைக்காரன் சுகமானான். இன்று நீங்கள் சும்மா இருப்பீர்கள் கர்த்தர் உங்களுக்காக யுத்தத்தை நடப்பிப்பார் என்று கூறப்பட்டிருக்கின்றது. நாகமானின் குஷ்டரோகம் நீங்க அவன் யோர்தானில் ஏழுதரம் முழுக வேண்டியதாயிற்று. கிதியோன் முந்நூறு மனிதர்களோடு, கர்த்தர் கற்பித்த பிரகாரமாக, பெரிய இராணுவத்தோடு எதிர்த்து யுத்தம் செய்ய புறப்பட்டான். இப்படியாக, இவர்கள் யாவரும் தேவனை விசுவாசித்தார்கள். அதன் பின்னர், சந்தேகப்படாமல், தேவனுடைய வார்த்தைக்கு தேவ தாசர்கள் கற்பித்தபடி கீழ்படிந்தார்கள். அவைகளே விசுவாசத்தின் கிரியைகள். சில சமயங்களிலே விசுவாசத்தின் கிரியையானது நீடியபொறுமையினால் உறுதி செய்யப்படும். எனவே நீங்களும் மனத்தாழ்மையோடு பொறுமையையும் தரித்துக் கொண்டிருங்கள்.

**யாக்கோபு 1:8**

**இருமனமுள்ளவன் தன் வழிகளிலெல்லாம் நிலையற்றவனாயிருக்கிறான்.**

**ஜெபம்**: பரலோக தேவனே, நீர் நம்பப்பண்ணின உம் வாக்குத்தத்தங்களை நான் எப்போதும் வாயினால் அறிக்கை செய்து, அவைகளை என் வாழ்வில் உறுதியாய் பற்றிக் கொண்டிருக்க நீர் எனக்கு கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# இரண்டு எஜமான்கள்

“இரண்டு எஜமான்களுக்கு ஊழியம் செய்ய ஒருவனாலும் கூடாது” என்று ஆண்டவராகிய இயேசு கூறியிருக்கின்றார். ஒரு ஊரிலே நீதி நியாயத்துடன் பணிவாக வேலை செய்யும் ஒரு மனிதன் வாழ்ந்து வந்தான். அந்த ஊரிலே, இரண்டு பண்ணை முதலாளிகள் இருந்தார் கள். இருவரும் அவனை தங்கள் பண்ணையிலே வேலை செய்யும்படி அழைத்தார்கள். அவர்களிலே உண்மையுள்ள முதலாளியான வன், தன் பண்ணையில் வேலை செய்யும், வேலைக்காரனுக்கு வரும் நன்மைகளையும், மறுபக் கத்திலே, பண்ணையிலே அவன் எதிர்நோக்கும் பிரச்சனைகள் இன்ன என்பதையும் முன்கூட்டியே தெளிவாக கூறினார். மற்ற முதலா ளியானவனோ, தனக்கு இலாபம் உண்டாகும்படியும், தன் நோக்கம் நிறை வேறும்படியும், வேலைக்காரனை நோக்கி: நீ என் பண்ணையிலே வேலை பார்த்தால், நீ சீக்கிரமாக பெரியவ னாகிவிடுவாய். குறுகிய காலத்திலே அதிகம் உழைக்கலாம். அதிகமாய் கஷ்டப்படத் தேவையில்லை என்று அவனுக்கு பாதி உண்மையைக் கூறினான். இவர்களில் ஒரு முதலாளிக்கே அந்த வேலைக்காரன் வேலை பார்க்க முடியும். அவர்களில் ஒரு வனுக்கே அவன் விசுவாசமு ள்ளனாக இருக்க முடியும். ஏனெனில், அவை இரண்டு பண்ணைகள், அவற்றின் சொந்தக்காரர் இருவர்கள். அந்தப் பிரகாரமாகவே, தேவனானவரும், உலக பொருளும் நமக்கு முன்பாக இருக்கின்றது. வாழ்வ டையும்படி தேவனானவர் யாவரையும் அழைக்கின்றார். அதே வேளையிலே, வாழ்வை அழிக்கும்படிக்கு உலகப் பொருளுக்கு எஜமானனாக இருக்கும் எதிராளியாவனும் அழை க்கின்றான். ஒரு விசுவாசியாவன், தேவனானவருக்கும் உலக பொரு ளுக்கும் விசுவாசியாக இருக்க முடியாது. நாம் உலகத்தில் வாழும் வரை சில உலகப் பொருட்கள் நமக்குத் தேவை. ஆனால், நம்முடைய ஆசை எதைப்பற்றியிருக்கி ன்றது என்பதை குறித்து நாம் எச்சரிக்கை யுள்ளவர்களாக இருக்க வேண்டும். இன்று விசுவாச மார்க்கத்தார் ஐசுவரியத்தின் பெருக்கம் யாவற்றையும் தேவ ஆசீர்வாதம் என்று அவற்றை சார்ந்து கொள் வதால், இதைக் குறித்த உபதேசம் பலருக்கு இன்று கடினமாக இரு க்கின்றது. உங்கள் ஆசை எஜமானனாகிய இயேசுவையே பற்றி இரு க்கட்டும். உங்கள் பொக்கிஷத்தை பரலோகத்திலே சேர்த்து வைத்தி ருங்கள்.

**மத்தேயு 6:24**

இரண்டு எஜமான்களுக்கு ஊழியம் செய்ய ஒருவனாலும் கூடாது;

**ஜெபம்**: என் தேவனாகிய கர்த்தாவே, அழிந்து போகும் உலக செல்வத்தின்மேல் என் கண்களை பதிய வைக்காமல், இந்த உலகிலே போதுமென்கின்ற மனதோடு வாழ எனக்கு பிரகாசமுள்ள மனக்கண்களை தந்தருள்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.